மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: November, 1910.	No-11.
புத்தகம் - கஉ.	சென்னப்பட்டணம்: நவம்பர்மீ 1910.	இலக்கம்-11

இந்திய ஸ்திரீகளுக்கு கல்வி.

பரோடா மகாராணியாரின் அபிப்பிராயம்.

இங்கிலாந்தில் சகோதரியார் எவலீன் என்றமாது இங்கிலாந்தில் சர்வ கலாசாலையுள்ள பற்பல பட்டணங்களில் இந்தியமாணவர்களுக்கு இருப்பிடம் அமைக்கவேண்டுமென்ற எண்ணத்தை மகாராணியாருடன் தெரிவித்தபொழுது, "பிள்ளைகள் எப்படியாவது அக்கரையுடன் படிப்பார்கள், பரிதாபமான பெண்கள் கதிதான் கஷ்டமாகயிருக்கிறது" என பரோடாமகாராணியார் சொன்னார்கள். மகாராணியார் சொன்னது முழுமையும் உண்மையே. இவரது கணவர் எப்படி யாவராலும் மதிக்கப்பட்டு இந்திய அரசர்களில் சிறந்தவராக விளங்கிவருகிறாரோ அம்மாதிரியே இம்மகாராணியும் விளங்கிவருகிறார்கள். இந்திய ஸ்திரீகள் கற்று தேறவேண்டுமென்ற எண்ணம் தவிர வேறு எண்ணம் இவரது இருதயத்தில் கிடையாது.

மனிதர்களாகிய நமக்கோ இது பெருத்த அவமானம் ஸ்திரீகளுக்கு கல்வி புகட்டாமல் அலட்சியமாயிருந்து வருகிறதானது நாம் எவ்வளவு சுயநயம் பாராட்டுகிறோமென்பதை காண்பிக்கிறதல்லவா? சென்னை கௌன்சில் ஆப்எடுகேஷன் சங்கத்தார்கூட இவ்விஷயத்தைக் கவனியாமலிருப்பது மிக்க விசனகரமாயிருக்கிறது. பெண்கள் பாலியவயதில் மனைவிகளாய் விடுகிறபடியால் அவர்களுக்கு உயர்தரப்படிப்பு புகட்டுவது அசாத்தியமான காரியமென்று வாதாட அநேகர் முன் வருவார்களென்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் எவ்வளவு புருடர்கள் கற்று வருகிறார்களோ அவ்வளவு ஸ்திரீகள் கற்று வந்தால் ஆயிரம் மடங்கு சுலபமாயிராதா? தயை செய்து சொல்லுங்கள். நிச்சயமாகவே வீரபராக்கிரம முள்ளவர்கள் சரித்திரத்தில் ஸ்திரீகளுடைய உறுதிசொல்லைக் கேட்டு கம்பீரமான செயல்களைச் செய்து முடித்த சமயங்கள் அநேகமிருக்கின்றன.

மனிதர்கள் நமது தாய்மார்களுக்கும் குமாரத்திமார்களுக்கும் ஒன்றும் செய்யாவிடின், ஸ்திரீகளே இவ்வேலையை யெடுத்துச் செய்யட்டும். கல்வியிற்றேர்ந்த மாதர்கள் தங்கள் இனத்தாராகிய கல்வியில்லாதவர்களுக்கு கல்வி

புகட்டுவது தங்கள் கடமையென்று உணரட்டும். இவ்விஷயமாக அவர்கள் தங்கள் இனத்தாரை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவர தங்களாலியன்றளவு காலம், திரவியம், தேகசிரமம் முதலியவைகளைக் கவனியாமல் முயலும்படி நாம் மிக்க அநுதாபத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தாய்மார்களும், சகோதாரிகளும் பரோடாமகாராணியாரைப் பின்பற்றுவார்களாக. நேஷனல் இந்தியன் சபையாரின் உதவியை நாடி. உழைக்கும் பக்ஷத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இச்சபையின கிளைச்சங்கம்ஏற்படுத்தி ஆங்காங்குள்ள ஸ்திரீகளுக்கு வேண்டிய கல்வியைப் புகட்டி அவர்களை நற்கதிக்குக் கொண்டுவரலாம். இவ்விஷயத்தைக்குறித்து கற்றறிந்த மாதர்களும், கனவான்களும் தீர்க்காலோசித்து ஏதாவது சாஸ்வதமாகச் செய்யமுன்வருவார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

பாரசீக மாதர்களின் கல்வி,

முப்பது வருஷங்களுக்கு முன் அமெரிக்காவிலிருந்து சில கிறிஸ்தவ மாதர்கள் பர்ஷியாவிலுள்ள மாதர்களுக்கு கல்வி புகட்டவந்து ஒரு பாடசாலையை ஸ்தாபித்தார்கள். அப்பொழுது 12 பெண்மணிகள் தான் இங்கு வந்து படித்தார்களாம். வருஷக்கடைசியில் 50 பேர்கூட இருக்கவில்லையாம். இவர்களுக்கு சம்பளம் கிடையாது. புஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்பட்டதாம். மேலும் இவர்களுக்கும் அன்ன வஸ்திரமும் அளிக்கப்பட்டதாம். 1876-ம்௵ ஒரு மகம்மதியப் பெண் வந்து சேர்ந்தாளாம், 1900-ம்௵ வரையில் அதிக மகம்மதியப் பெண்மணிகள் சேரா விடினும் பாடசாலை நடத்தப் பட்டு வந்தது. ஜனங்கள் இப்பாடசாலையை நடத்துபவர்கள் தங்கள் பெண்மணிகளை கிறிஸ்தவமதத்தில் சேர்த்துவிடுவார்களோவென்று எண்ணியிருந்தார்களாம். வரவர அவ்வித எண்ணம்நீங்கி தங்கள்பெண்மணிகளை இப்பாடசாலைக்கு யனுப்பிவர தலைப்பட்டார்கள். இப்பொழுது 13 பெண்மணிகள் இப்பாடசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். 800-பெண்மணிகள் ஐஸ்கூல் வரையிலும் படித்து தேறியிருக்கிறார்கள். சென்ற வருடத்தில் 235-பெண்மணிகள் சேர்ந்தார்கள். இப்பாடசாலையின் விருத்தியைப் பார்த்து பர்ஷியா ஜனங்கள் தங்கள் புத்திரிகளுக்கு கல்வி புகட்டிவர நாமே தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று எண்ணி சுமார் 50-பெண்பாடசாலைகளை டிஹரான் என்ற பட்டணத்தில் ஸ்தாபித்து நடத்தி வருகிறார்களாம். சில ஸ்திரீகள் உபாத்தி மார்களா யிருந்து தங்கள் சகோதரிகளுக்குப் போதித்து வருகிறார்கள். இப்பாடசாலைகளி லொன்றை ஒருவர், பார்வையிட்டபோது "என் மனைவி கற்கவில்லையே, ஆயினும் என் குமாரத்தி இங்கு படித்து பி.ஏ. பட்டம்பெற்று, தனது சகோதரிகளுக்குப் போதித்துவருவாள்" என்று நினைக்கிறேன் என்பதாகச் சொன்னாராம்.

இவ்வருஷம் சென்ற எப்ரல் மாதத்தில் டிஹரான் பட்டணத்தில் மகமதியமாதர்களும் பாரசீகமாதர்களும் ஒன்றாகக்கூடி நமதுதேசம்விருத்தி

யடையவேண்டுமானல் நமது சகோதரிகளுக்கு கல்வி புகட்டிவர தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்ற தீர்மானம் செய்து அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்களாம். இவ்விதம் இங்கும் செய்தாலல்லவோ நமது தேசமும் விருத்தியடையும், யாவரும் சுகமாக வாழலாம். இதை ஒவ்வொருவரும் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

சுயபாஷை அவசியம்.

நமது பாடசாலைகளில் பிள்ளைகள் தமிழ், தெலுங்கு முதலிய சுயபாஷைகளை நன்றாகக் கற்றுப்பேசும்படி உபாத்திமார்கள் முயன்று வரவேண்டும். "தனது சுயபாஷையை நன்றாகக் கற்று பேசத்தெரிந்தாலொழிய நன்றாக கற்றவனாகமாட்டான்" என்று அநேக வித்வான்கள் சொல்வது சரியே. நமது தேசத்தில்தான் ஆண் பெண் முதலியவர்கள் சுயபாஷையை மறந்துவருகிறார்கள். சுயபாஷையை அவர்களுக்கு நன்றாகப் பேசத்தெரிகிறதில்லை. இப்படியிருந்தால் அவர்களுக்கு அறிவு எப்படி உண்டாகும்? கீழ்வகுப்பிலிருந்தே பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் ஆண்பிள்ளைகளையும், பெண்பிள்ளைகளையும் சுயபாஷையை நன்றாகப் பயின்றுவரவும் அதில் தெளிவாகப்பேசவும் எழுதவும் பழக்கிவரவேண்டும். இது முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தானிருக்கும். முதலில் கஷ்டப்பட்டால் பின்னிட்டு இருதிறத்தாருக்கும்—உபாத்தியாயர்களுக்குமாணாக்கர்களுக்கும்—மிகவுபகாரமாயிருக்கும். "சுயபாஷையை விருத்தி செய்யாத தேசம் முன்னுக்கு வராது" என்று ஒரு ராணியார் சொல்லியபடி நமது தேசம் விருத்திக்கு வரவேண்டுமானல் சுயபாஷையைக்கற்று அதில் பாண்டித்யமடையவேண்டும். இது உபாத்திமார்களின் கடமையேயாம். இக்கடமையை அவர்கள் மறவாமல் எப்பொழுதும் மனதில் வைத்துக்கொண்டு நடப்பார்களாக.

கடவுளை நம்பி கடமையைச் செய்,

இந்தப் பழமொழியின் தாற்பர்யமாவது:—சாதாரணமாக நாம் "எதற்கும் ஸ்வாமி இருக்கிறது" என்று சொல்லிச் சும்மா இருக்க பார்க்கிறோம். இதனல் அநேகமாய்க் கார்யம் ஸித்தியாவதில்லை. இப்படி இல்லாமல் நாம் கடவுளை நம்பி நம் கடமையைச் செய்தால் நம் எண்ணம் நிறைவேறும். பக்தியும் ஸ்ரத்தையும் நம் கடமையில் மிக வேண்டுமேதவிர வெறும் கடவுளில் மட்டும் இருந்தால் போதாது. இதை ஒருவாறு பகவானே சிறிது விளக்கியிருக்கிறார். அந்தக் கதை பின்வருகிறது.

ஓர் ஊரிலே பெரிய மடம் ஒன்று இருந்தது. அதில் பல சந்நியாசிகள் சேர்ந்து முக்திப்பெறப் பக்தி பண்ணிக்கொண் டிருந்தார்கள். அவர்களிற் சிலர் சதா இருக்குவேதம் உரைப்பர்; இன்னும் சிலர் யசுர்வேதம் இசைப்பர்; மற்றோர் சாமவேதம்பார்ப்பர்; ஏனையோர் அதர்வவேதம் ஓதுவர். இவற்றோடு இவ்வுலகத்தாருக்கும் இதமே செய்து வந்தார்கள். தினத்துக்கு ஒருவர் ஏராளமான ஏழை ஜனங்களுக்குச் சோறு போடும் தர்மத்தையும் கைக்கொண்டிருந்தனர். இப்படி இருந்த ஸாதுக்களில் ஒருவருக்கு ஈஸ்வர தரிஸனம் செய்யவேண்டும், குறைந்தது ஒரு உப்தரிசனமாவது காணவேண்டும் என்ற ஆசை அதிகமாயிருந்தது. தினமும் அதே ப்ரார்த்தனையாய் இருந்தார்.

இப்படி இருக்க ஒருநாள் இந்தச் சந்நியாசி தம் ஒழிவு அறையில் இருந்து தம் த்யானமே த்யானமாக இருந்தார். இந்தசமயத்தில் அதற்குள்ளே ஜோதி ஒன்று தோன்றியது. உடனே ஞானியும் "ஓ! என் மனோபீஷ்டம் இன்று நிறைவேறும்" என்று எண்ணிக் களிப்படைந்தவராய் இங்கும், அங்கும், எங்கும் சுற்றி முற்றிலும் பார்த்தார். பக்கத்தே ஒரு ப்ரம்ஹ தேஜஸோடும் கூடிய உருவம் காணலாயினர். முனிவர் மகிழ்ச்சிக்கு அளவு என்பது இல்லாதபடி பரவஸப்பட்டிருந்தார். அவருடன் பேசலாம் என்று நினைத்து வார்த்தையாட வாயையும் திறந்தார். ஆனல் அதற்குள் வழக்கம் போல் ஏழைகள் பலர் வாயில்வந்துகூடி "ஸாமி! ஸாமி" என்று கூவலாயினர். அன்று அந்தத் திருப்பணியைச் செய்ய வேண்டியவரும் அவரே. அந்தோ! சந்நியாசி மனம் பட்டபாடுதான் என்ன? அய்யோ! இதென்ன! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை போலிருக்கிறதே. சரிதான்! இன்றைக்கு ஒரு நாள் போடாவிட்டால்தான் என்ன? வேண்டுமானல் காத்திருந்து வாங்கிக்கொண்டு போகிறார்கள். என்னவோ இத்தனைநாளும் இருந்த வரம் இன்றே கிடைக்கும்போல் இருக்கிறது. நம் வேலையைப் பார்க்க நாம்போய் விட்டால் ஜோதிநாயகரும் போய்விடுவாரே. இன்னும் ஒருமுறை இப்படிக் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்?" என்று இப்படிக்கெல்லாம் யோசித்தார். பின்னும் "ஈசன் நமக்கிட்ட வேலையைத் திட்டமாய்ச் செய்யவேண்டும் அல்லவா! நம் கடமையைச் செய்துவந்தமையால் தானே இந்த ஜோதி தரிசனம் கிட்டியது. இப்போதும் எப்போதும் உள்ள வேலைக்குறைவு ஏற்பட்டால் இனிமேல் இதுவும் கிடையாது போகுமோ!" என்று ஸந்தேகித்துப் பயந்து தன் பணியையே செய்யப்போயினர்.

போய், அங்குவந்திருந்த அத்தனைபேருக்கும் அன்னம் அளித்து உபசரித்துவிட்டுத் திரும்பவும் தன் அறைக்கு வெகு வ்யாகூலத்துடன் நுழைந்தார். அங்கே முன்போல ஜோதிஸ்வரூபமும் விளங்கியது. கண்ட அடியார் களிகூர்ந்தார். அருகில் சென்றார். அப்போது ஜோதிஸ்வரர் "நீ என்னை விட்டுவிட்டு உன் நித்தியாநுஷ்டான கர்மத்தையே பெரிதாகக் கொண்டு போனதே சரி; அப்படி நீ அகலாது உன் கடமையை உபேக்ஷைசெய்து இங்கேயே இருந்திருந்தால் நான் வந்தவழி திரும்பிபோயிருப்பேன்" என்றார்.

கடவுளை நம்பிக் கடமையைச் செய்.

கோவை. வீ. சிதம்பர உபாத்தியாயர்.

சர்வஜித்.

32-வது அத்தியாயம்.

எல்லா சாக்ஷிகளும் விசாரிக்கப் பட்டவுடன் ஸர்வஜித் தன்சார் பாகப் பின்வருமாறு பேசினான்:—

"மகாகனம் பொருந்திய நியாயாதிபதிகளே, இவ்வுலகில் பிறந்தமானிடர்களாகிய நாம் எங்கும் நடக்கிறதையும், நடந்ததையும், நடக்கப் போகிறதையும் அறியக் கூடியவர்களல்ல. நாம் நேரில் பார்த்தவைகளைத் தவிர மற்றெவையும் நேரேபார்த்ததாகச் சொல்லுகிறவர்களின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து அவர்கள் சொல்லுவதை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அதேமாதிரி நியாயாதிபதிகள் சாக்ஷிகள் சொல்லுகிறதை நம்பி அதிலிருந்து முடிவுசெய்ய வேண்டியதாயிருக்கிறது. ஆனால் சாக்ஷிகளில் மெய்பேசுபவர்களு மிருக்கிறார்கள் பொய் பேசுபவர்களு மிருக்கிறார்கள். இன்றைக்குச் சொன்ன சாக்ஷிகளில் இருவரைத்தவிர மற்றெல்லோரும் சொன்னவைகள் உண்மையாயினும், அதிலிருந்து கனம்பொருந்திய பப்ளிக் பிராஸிக்யூடர் செய்த அனுமானம் தவறானது. ஏனெனில் சில சமயங்களில் சந்தர்ப்பங்களெல்லாம் ஒன்றுகூடி ஒன்றுமறியாதவனைக்கூட குற்றஞ் செய்ததாகச் சம்சயிக்கும்படி செய்யக்கூடுமென்பதை தாங்கள் அனுபோகத்தில் கண்டிருக்கலாம். இது நிற்க, வரதனும் பிரபு அநங்கரும் தங்கள் சமுகத்தில் சொல்லிய யாவும் பொய்—முற்றிலும் பொய்—எள்ளளவேனும் உண்மையல்ல."

"சிறுவனே, இப்படி நீ பேச இனி நான் இடங்கொடேன். இவர்கள் உன்மேல் வீண்பழி சுமத்தச் சிறிதுங் காரணமில்லாமலிருக்க அவர்களை தூஷிப்பது சரியல்ல" என்றார் நியாயாதிபதி.

"நான் சொல்லுவது தங்களுக்கு மனவருத்தமாயிருந்தால் அதைக்குறித்து இனிப்பேசவில்லை. ஆயினும் என்னுயிருக்கும் அதற்கும் மேலான என் மானத்திற்கும் நாசத்தை விளைவிக்கக்கூடிய ஒரு அபாண்டமான குற்றம் கற்பிக்கப்பட்டு என்மேல் சுமத்தப்பட்டிருக்கையில், என்னுயிரையும் எனது நல்லபெயரையும் காக்கவேண்டியது எனது கடன். தாங்கள் மனஸ்தாபப் படாமலிருக்க கிளரப்பட்ட என்னுணர்ச்சிகளின் ஆவேசத்தை யடைக்கி கூடியமட்டும் சாந்தமாய்ச் சொல்லுகிறேன். நான் பிரபு புஷ்யமித்திரரால் குழந்தைப்பருவம் முதல்ஆதரித்து வளர்க்கப்பட்டவனென்பது உண்மையே. அந்த உபகாரத்திற்காக நான் அவரிடத்தில் தெய்வத்தினிடத்திற்போல் பக்திகொண்டிருக்கிறேன். என் சொந்தத்தகப்பனுக்கு நான்எவ்வளவு கடமைப்பட்டிருக்க வேண்டுமோ அதிலும் பலமடங்கு அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் என் தகப்பன் ஏழ்மைத்தனத்தில் இருக்கும் பக்ஷத்தில் அத்தகப்பன் இவ்வளவு எனக்குச் செய்திருக்கமுடியாது.

குழந்தைமுதல் நான் சாப்பிட்ட அன்னம் அவருடையதே; நான் தரித்திருக்கும் வஸ்திரம் அவருடையதே; நான் படுத்த படுக்கை அவருடை

யதே; நானறிந்த வித்தையும் அவராலே தான். என்னைக்கேவலம் அன்னவஸ்திரங்கொடுத்து மாத்திரம் இரக்ஷிக்காமல் தனது மக்களுக்கொப்பாக என்னை உயர்த்தி அவர்களைப்போலவே என்னைச் செல்வமாக வளர்த்து வந்திருக்கிறார். நான் அவரிடத்தில் பாராட்டி வந்திருக்கிற பக்தி விசுவாசத்தைக்காட்டிலும் எந்தப்புத்திரனும் தன்சொந்தத்தந்தையிடத்தில் பாராட்டிக்கொண்டுவந்திருக்கமாட்டான். இப்பரோபகாரியின் மனதின் அற்பதுன்பத்தையும் நீக்கவேண்டி என்னுயிரைக் கொடுத்துவிடக் கேட்டாலும் சந்தோஷ பரவசனாய் அவ்வுயிரைக்கொடுக்க ஆவலாய் கார்த்திருக்கிறேன். இப்பொழுது என்மேல் பழிசுமத்தப்படாமலிருந்து, இவ்விசாரணையில்லாமலுமிருந்து, என்னுயிரைக் கொடுப்பதால் பிரபு புஷ்ய மித்திரருடைய ஏக புத்திரன் திரும்பிவர வழியிருந்தால், நான் எவ்வளவு அடங்காத மனக்களிப்புடனும் பரவசத்தையுண்டு பண்ணுகிற உற்சாகத்தோடும் என்னுயிரைக் கொடுப்பேனென்பதை பகவானறிவார்.

இப்படி பேசிக்கொண்டு வருகையில் ஸர்வஜித்தின் குரல் தடுமாறிற்று; நெஞ்சடைத்துக்கொண்டது; மேலே பேச நாவெழும்பவில்லை. ஆகையால் சிறிது நேரம் பேசாமல் அவன் தயங்கும்படியாயிற்று. மனது தன் வசப்பட்டவுடன் மேலே சொல்லுகிறான்.

"பிரபு ஸுரேந்திரனை நான் சகோதரனாக பாவித்து வந்திருக்கிறேன். நான் தகப்பனுக்கு என்னுயிரைக் கொடுக்கக் கார்த்திருக்கிற மாதிரி மகனுக்குங் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன். நான் ஸுரேந்திரனுடன் குழந்தைப் பருவம் முதல் பழகி வந்ததை யோசிக்கும்போது நாங்களிருவரும் ஒருமிக்க விளையாடினதும், குழந்தைப்பருவம் நீங்கி பால்ய யௌவன பருவங்களில் நாங்களிருவரும் போட்டி போட்டுக்கொண்டு ஆயுதவித்தையைப் பயின்றதும் எனது ஞாபகத்திற்கு வருகின்றன. பிரபு ஸுரேந்திரன் மற்றெவரிடத்தில் இறுமாப்பாய் நடந்துவந்தபோதிலும் என்னிடத்தில் சகோதரனைப் போலவே நடந்து வந்ததுண்டு. பிரபு ஸுரேந்திரன் காணாமற் போனதையறிந்தது முதற்கொண்டு நான் வடித்திருக்கிற கண்ணீர்களுக்களவில்லை. இவ்வளவு சிநேகமாயிருந்த எங்களுக்கு பகைமை உண்டானது நான் சீமாட்டி லீலாவதியிடத்தில் வைத்த நேசந்தான் காரணம். நான் சீமாட்டியை நேசித்தது குற்றமென்று நியாயாதிபதிகளுக்குப் பட்டால், அது குற்றமாகவேயிருக்கட்டும். ஆனால் எனக்குத்தோன்றுகிறமட்டில் நான் சீமாட்டி லீலாவதியை நேசித்தல் ஒருகுற்றமாகப்படவில்லை. பிரபு புஷ்யமித்திரரும் பிரபு ஸுரேந்திரனுங்கூட நான் அவர்களைப்போலவே உயர் குலத்திற் பிறந்திருந்து எனது நேசத்தை சீமாட்டிக்கு வெளியிட்டிருந்தால் அதைக்குற்றமாக எண்ணியிருக்க மாட்டார்கள். ஆனால் என் குலங்கோத்திரங்களையறியாத நான் சீமாட்டியிடத்தில் வெளியிட்டது பெருங்குற்றமாகி விட்டது. நமது ஜாதிக்கட்டுப்பாடுகளை உத்தேசிக்கும்போது நான் என்நேசத்தை வெளியிட்டதுகுற்றந்தான். ஆனால் நியாயாதிபதிகள்நேசம் என்னும் உணர்ச்சியானது ஜாதிகட்டுப்பாட்டில் அடங்கியதல்லவென்பதையும், அவ்வுணர்ச்சியானது ஒவ்வொருவனுடைய ஹிருதயத்திலும் ஜாதிபேதமின்றி ஈசுவரனால் ஊன்றப்பட்டதென்பதையும் நினைத்தால், நான் செய்ததை ஒரு பெருங்குற்றமாக பாவிக்கமாட்டீர்களென நம்புகிறேன்"

மறுபடியும் சிறிது நிமிஷங்கள் நமது கதாநாயகன் தாமதித்தான்; போஜன மண்டபமெங்கும் நிச்சத்தமாயிருந்தது. அப்போது பிரபு புஷ்யமித்திரர் தனது இருமுகங்களையும் தனது முழங்கால்களில் நட்டுக்கொண்டு, சாய்ந்து குனிந்திருந்த முகத்தை விரித்து தன் இருகைகளினல் மூடிக்கொண்டு தீர்க்காலோசனையிலிருப்பதாகவோ அல்லது மனவருத்தத்துடனிருப்பதாகவோ தோன்றினர். அவர் மனதில் என்ன எண்ணங்கள் உதித்துக்கொண்டிருந்தன வென்பதை யாரறியக்கூடும்? இது இப்படியிருக்க, ஸர்வஜித் மேற் சொல்லுகிறன்.

நான் செய்த குற்றத்திற்காக மற்றவர்களோடு சேரக்கூடாதென்றும், அவர்களுடன் சேர்ந்துண்ணக் கூடாதென்றும் நான் தாக்கீதிடப்பட்டதையும் அது முதல் நான் எனதறையிலேயே தனியாயிருந்து வந்ததையும் அதிகமாய் எடுத்துரைக்கவேண்டாம். இப்படிக் காலத்தைக்கழித்து வந்த எனக்கு அங்கு விட்டோடிவிடுவதே நீதியென்று பன்முறை மனதிற்பட்டது. ஆனல் அப்படிச்செய்தல் பிரபுவினுடைய ஆக்ஞையை அலக்ஷியஞ் செய்தலாகுமென்றும், அப்படிச்செய்வதினல் அவர் என்னை நன்றி விசுவாசமில்லாதவனென்று நினைக்க இடமாகுமென்றுங் கருதி, என் விருப்பத்தை நிறைவேற்றுமலிருந்துவிட்டேன். நானப்படிச்செய்திருந்தால் இப்பொழுது என்மேல் சுமத்தப்பட்டிருக்கிற பழிபாவங்களுக்குஆளாகவிருக்கமாட்டேன். இப்படிப்பல வாரங்கள் சென்றன. இதற்கிடையிற்றன் மலையதிபதிகளினுட்கள் கையிலிருந்து நான் சீமாட்டி லீலாவதியை விடுவித்தது. இதைக்குறித்து நான் விஸ்தரிக்க வேண்டியதில்லை. இப்போது பிரபு ஸுரேந்திரன் காணுமற்போனதினத்திற்கு வந்துவிட்டேன். நான் அன்றுமத்தியானம் காட்டில் சேஷியம்மாளோடு கூட இருந்த சீமாட்டி லீலாவதியைச் சந்தித்தேன். நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் பிரபு ஸுரேந்திரன் கோபாவேசத்துடன் வந்ததையும், அவன் என்மனதைக்குத்தும்படியான வார்த்தைகளால் நிந்தித்ததையும், அவ்வார்த்தைகளைப் பொறுக்காதுநான் கத்தியுறையில் ஒருவிநாடி கையைப்போட்டு சடுதியில் எடுத்துவிட்டதையும், பிரபு ஸுரேந்திரன் என்னை என்னதிட்டினபோதிலும், நான் அவனேடு சண்டை செய்வதில்லையென்று சொன்னதையும், நான் சண்டை செய்வதில்லையென்ற உறுதிமொழியை வாங்கிக்கொண்ட பிறகுதான் சேஷியம்மாளும்சீமாட்டி லீலாவதியும் அங்கு விட்டகன்றூர்களென்பதையும் பப்ளிக் பிராஸிக்யூடர் வெகு விஸ்தாரமாய்ச் சொல்லிவிட்டார். அவர் சொன்னவை யாவும் மெய்யே. இவர்கள் சென்றவுடன் பிரபு ஸுரேந்திரன் என்னைக்கடுஞ் சொற்களாற் திட்டினன். யாவையும் பொறுத்துக்கொண்டே நான் அவ்விடம் விட்டு விரைந்து சென்றேன். ஆனல் பிரபு ஸுரேந்திரனே என்னைத்திட்டிக்கொண்டே பின் தொடர்ந்து வந்தான். இப்படி இருவருமாக ஒரு நதியருகே வந்தோம். சமீபத்தில் பெய்த மழையால் அந்நதி பிரவாகத்திருந்தது. நாங்கள் நதியை நெருங்குகையில் ஒரு புதரில் பதுங்கியிருந்த காட்டுப் பன்றியொன்று எங்கள் மேல் மூர்க்கமாய்ப் பாய்ந்தது. உடனே எங்கள் வாட்களை யுருவினேம். முதலில் அம்மிருகம் பிரபு ஸுரேந்திரனை மகாஉக்கிரமாய்த்தாக்கிற்று. நான் அதைப் பின் பக்கத்திலெதிர்த்தேன்.

இப்படியதை யெதிர்த்துக்கொண்டே கரையோரத்திற்கு வந்துவிட்டோம். அந்தக்கரை மழைத்தண்ணீரால் நனைந்து சேராயிருந்ததால் எங்கள்

காலடிகள் அதிற்காணப்பட்டது அதிசயிக்கத் தக்கதல்ல. இப்படியிருக்க, பிரபு ஸுரேந்திரன் பீதியினாலோ அல்லது பன்றியால் கடுமையாய்க் காயப் படுத்தப்பட்டதின் நிமித்தமோ தெரியவில்லை—திடீரென்று அவ்விடத்தை விட்டோடிவிட்டான். உடனே பன்றி என்மேல் திரும்பிற்று. அதுவும் என்னைக்கொன்றிருக்கும்; ஏனெனில் நான் கால் சறுக்கி கீழே சேரில் விழுந்து விட்டேன். ஆகையாற்றான் என்னுடைகளிற் களிமண் ஒட்டிக்கொண்டிருந்தது. ஆனால் நான் சடுதியிலெழுந்து என் கத்தியை அதன் கழுத்தில் பலமாய்ப் பாய்ச்சிவிட்டேன். நானதைக்குத்தின வேகத்தால் கத்தியானது பிடியண்டை இரண்டாய் ஒடிந்துவிட்டது. பன்றியைக்கொன்றதும் ஸுரேந்திரனைத்தேட விரைந்து சென்றேன். ஒருமணிநேரம் பிரபுவைகாட்டில் தேடியும் காணவில்லை. பிறகு பன்றி கிடந்த இடத்திற்கு வர அப்பன்றி அங்கிலாததைக்கண்டு ஆச்சரியமடைந்தேன். அந்தவிடத்தில் ஒரு குட்டை இரத்தமும், எனது ஒடிந்தபிடியும், ஆட்களின் காலடிகளினடையாளங்களும் மாத்திரமிருந்தன. இதற்குப்பிறகு கோட்டைக்குத்திரும்பினேன்; என் முகக்குறிகள் அப்பொழுது ஒரு மாதிரியாய் கலங்கியிருந்தது சகஜந்தான்; கோட்டை வாயிலையடைந்தவுடன் பிரபு சுரேந்திரன் வந்து விட்டானாவென்று கேட்டதும் இயற்கைதான். நான் என்னழுக்கடைந்த உடைகளை மாற்றிக்கொள்ள உள்ளே வேகமாய்ச் சென்றதும் ஆச்சிரியப்படத்தக்கதல்ல.

சற்று நேரத்திற்கெல்லாம் பிரபு புஷ்யமித்திரர் முதலான பிரபுக்களின் சமுகத்திற்கு அழைக்கப்பட்டு, ஸுரேந்திரனைக் கொன்றேனென்ற கோரமானபழி என்மேல் சுமத்தப்பட்டபொழுது நான் அடிபட்டவன்போல் சித்தலங்கலங்கித் தடுமாறினதும் வியக்கத்தக்கதல்ல. ஆனால் இப்போது தங்களுக்குச் சொல்லிவந்த நியாயங்களை பிரபுக்களின் சமுகத்தில் எடுத்துச்சொல்ல இருக்குஞ் சமயத்தில், ஒரு காட்டுக்காவலன் ஸுரேந்திரனுடைய சித்தரித்த சால்வையையும் இறகொடிந்த தொப்பியையும் எடுத்துக்கொண்டு உள்ளே ஓடிவந்தான். அவ்விரண்டையுங் கண்டவுடன் பிரபு ஸுரேந்திரனை ஆற்று வெள்ள மடித்துக்கொண்டு போய் விட்டதென்றே எண்ணினேன். இவ்வெண்ணம் உதிக்கவே, ஸுரேந்திரனுடைய முடிவின் துக்கத்தைத் தாங்கமாட்டாமல் கீழே மூர்ச்சித்து விழுந்துவிட்டேன். நான் விழித்துக்கொண்டபோது ஒரு கிடங்கி லடைபட்டிருந்தேன். சிறைக்காவலனாக வரதன் நியமிக்கப்பட்டிருந்தான். அவன் எனது உணவைக்கொண்டு வந்தபோது நான் சொல்லவிருந்ததைக் கேட்டுப் பிரபு புஷ்யமித்திரரிடத்தில் தெரிவிக்கும்படி மன்றாடினேன்; அவன் அதற்குச்சிறிதும் இணங்கவில்லை. நான் மலையதிபதிகளால் அடிபட்டு டலஹீனனாயிருக்கையில் உண்மையை சேஷியம்மாளிடத்திற்சொல்லி, அதை சீமாட்டி லீலாவதியிடஞ் சொல்லி, அவள் மூலமாய் அவளது தந்தைக்குத் தெரிவிக்கும்படி சொன்னேன். ஆனால் மறுநாள் சேஷியம்மாள் என்னிடம் சீமாட்டி லீலாவதி தகப்பனிடத்தில் சொல்ல எத்தனிக்கையில் அவர் கடுங்கோபத்துடன் என் பெயரை அவர் இருக்கிறபோது சொல்லவேண்டாமென்று சொல்ல, அவளும் மேலே பேசத்துணியவில்லை யென்று சொன்னாள். அன்று சாயங்காலமே என்னறையைக்கார்க்க இரண்டுகாவலர்கள்நிறுத்தப்பட்டார்கள்; அவர்களை நான் பிரபு புஷ்ய மித்திரருடைய பார்வைக்கென்று எழுதிவைத்திருந்த வாக்கு மூலத்தை அவரிடம் கொடுக்கும்படி என்னகெஞ்சியும் அவர்கள் என் வேண்டுகோளுக்கிசையவில்லை. நான் தங்களுடைய சமுகத்தில் சொல்லி

வந்த விஷயங்களெல்லாம் இதுவரையில் வெளிவராமலிருந்தது என்குற்றமல்ல. நான் சொன்னதிலிருந்து சில சாக்ஷிகள் கொடுத்த அத்தாக்ஷிகள் உண்மையாயிருந்தாலும், அவ்வத்தாக்ஷிகளிலிருந்து ஊகிக்கப்பட்ட அநுமானங்கள் தவறு என்று நியாயாதிபதிகளுக்குப் படக்கூடும்.”

மறுபடியும் ஸர்வஜித் சிறிது நேரம் தயங்கி பின்வருமாறு முடித்தான்.

“நான் சிறையிலிருந்து தப்பி ஓடினதாகச் சொன்னதைக் குறித்து நான் அதிகமாகப் பேசப்போகிறதில்லை. ஆயினும், பின் நடந்த சம்பவங்களைக்குறித்து நான் சிலவார்த்தைகளைச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. பிரபு அநங்கருடைய எந்த வேலையாட்களை நான் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறேனோ அவர்கள் என் கையால் சாகவில்லை. அவர்கள் என்னைப் பின்பற்றிப் பிடித்திழுத்துக்கொண்டுவர அனுப்பப்பட்டவர்களுமல்ல. ஆனால் புறப்பட்டதுமுதல் தாங்களாகவே என்னோடு வந்தவர்கள். நாங்கள் மூவரும் சேர்ந்துதான ஒருமிக்கச்சவாரி செய்துகொண்டு சென்றோம். வழியில மலையதிபதிகளோடும் அவர்களது ஆட்களோடும் நேர்ந்தபோரில் அவ்விருவரும் கொல்லப்பட்டார்கள். நானோ அக்கடும்போரிலிருந்து தப்பியோடி குண்டகீலனது கையிலிருந்த சிமாட்டி லீலாவதியைத் தப்புவிக்க தக்க சமயத்தில் கோட்டை வந்துசேர்ந்தேன். அவனாட்களோடு போராடுகையில் படுகாயப்படுத்தப்பட்டு தேகசுகமில்லாமல் படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். இச்சமயத்தில் வரதன் நான் வேலையாட்களைக்கொன்றதாக என்னைக் கோபித்துக்கொள்ள வந்ததாகவும், அதற்குமேல் நான் பிரபு அநங்கரை எனதறைக்கு வரும்படி வேண்டிக்கொண்டதாகவும், அப்படி என்மேல் கிருபைகூர்ந்து வந்தவரிடத்தில் நான் கர்ணகடோரமான குற்றங்களைச் செய்ததாக ஒத்துக்கொண்டதாகவும், கட்டுக்கதைகள் கற்பிக்கப்பட்டு தங்கள் சமுகத்தில் உண்மைகளென்று வெளியிடப்பட்டன. அவைகளுக்கு மறுமொழியாக நான் அவைகள் வெறும் கட்டுக்கதைகள், எள்ளளவேனும் நிஜங்கலந்ததல்லவென்று மாத்திரம் சொல்லி நிறுத்துகிறேன். வரதன் ஒரு முறையாவது எனதறைக்கு வரவுமில்லை; பிரபு அநங்கரை வரும்படி நான் சொல்லியனுப்பவுமில்லை. எனதுயிர் ஜூரியாகிய உங்கள் கையிலிருக்கிறது. உங்களது தீர்மானத்தை மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி வெளியிடுவீர்களென்ற நிச்சய நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.”

இப்படி ஸர்வஜித் பேசி முடித்தான்; தன்னைக்குறித்தும் வரதனைக்குறித்தும் ஸர்வஜித் பேசினவைகளை ஆக்ஷேபிப்பவன் போல் பிரபு அநங்கன் எழுந்தான். ஆனால் பிரபு புஷ்யமித்திரர் அவன் கையைப் பிடித்திழுத்து அவனை நாற்காலியிலுட்காரவைத்து, “பிரபுவே, இனி இவ்விஷயத்தை நியாயாதிபதிகளின் கையில் விட்டுவிடுங்கள்; எப்படியாகிலும் முடிவாகி சீக்கிரம் ஒழியட்டும். தாமதிக்கத் தாமதிக்க என் மனவருத்த மதிகரிக்கிறது” என்று சொன்னார். அதற்கு அநங்கன், “அவன் சொல்லுவதை நம்புகிறீரா, நான் சொல்லுவதை நம்புகிறீரா?” என்று கேட்டான். மறுமொழியாக புஷ்யமித்திரர், “தங்களை எப்படி நம்பாமலிருக்கமுடியும்? ஆயினும், என்மனம் குழப்பத்திலிருக்கிறது. இப்பொழுது என் சித்தம் என சுயாதீனத்தில் இல்லை” என்றார்.

இதுநிற்க, முக்கிய நியாயாதிபதி ஜூரியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

“ஜூரியிற்சேர்ந்த கனவான்களே, நீங்களத்தாக்ஷிகளின் ஆதாரத்தைக் கொண்டு உங்களது தீர்மானத்தை வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுதான். அதாவது கைதி காட்டுப் பன்றியைக் கொன்றதாகச் சொல்லுகிற வரலாற்றை நீங்கள் நம்பினால், பிரபு அநங்கரும் அவர் ஊழியனான வரதனும் கைதி சொல்லியனுப்பியக் குற்றத்தை ஒத்துக்கொண்டதாகச் சொல்லுகிற வைகளனைத்தும் பொய்யாக ஏற்படும் கைதி குற்றவாளியல்லவென்று நீங்கள் தீர்மானிக்கும் பக்ஷத்தில், நான் பிரபு அநங்கரையும் வரதனையும் பொய்சொன்ன குற்றத்திற்காக தண்டிப்பது கடமையாகும். ஆகையால் உங்களுக்கிஷ்டமானால் தனியாய்ப்போய் கைதியின் வார்த்தைகளை நம்புகிறதா அல்லது மற்ற இருவர்களுடைய வார்த்தைகளை நம்புகிறதா என்பதைக்குறித்து தீர்க்காலோசனை செய்து உங்களுடைய முடிவான அபிப்பிராயத்தைக் கொடுங்கள்.”

உடனே ஜூரியில் முக்கியமான போர்மானென்பவன் (Foreman) மற்றவர்களோடு சிறிது நேரம் பேசிவிட்டு, “நியாயாதிபதிகளே, நாங்கள் தனித்து யோசிக்கவேண்டிய தொன்றுமில்லை. நாங்கள் எல்லோரும் ஒரே முடிவிற்கு வந்துவிட்டோம்” என்றான்.

“கைதி குற்றவாளியென்றா அல்லது மாறாகவா?” என்று கேட்டார்.

“குற்றவாளி தான்” என்று மறுமொழிகூறினான். இதைக்கேட்டவுடன் ஸர்வஜித் கைகளைச் சேர்த்துக்கொண்டு, “ஈசா, உமது ஆக்ஞையை மீறி யார் நடக்கக்கூடும்? உமது விருப்பமே நடக்குக” என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

இதற்கப்பால் பப்ளிக் பிராஸிக்யூடர் எழுந்து, “பிரபு ஸுரேந்திரனுடைய கொலையைப்பற்றி கைதி குற்றவாளியென்று ஜூரியால் தீர்மானிக்கப் பட்டுவிட்டபடியால், இனி பிரபு அநங்கரின் வேலையாட்களின் கொலையைப் பற்றி விசாரிப்பது அனுவசியமாகும். ஆகையால் ஜூரியின் அபிப்பிராயப்படி நியாயாதிபதிகள் தீர்ப்பு செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்” என்றார்.

உடனே முக்கிய நியாயாதிபதி சொல்லுகிறார். “நான் இப்போது கைதி செய்திருக்கிற குற்றத்திற்காக தண்டனை விதிப்பது எனது துக்கமான கடமையாகிறது. அத்தண்டனையாவது, இக்கைதியானவன் எங்கே கொலைசெய்தானோ அவ்விடத்தில் எழுப்பப்பட்ட ஒரு தூக்குமரத்தில் இன்று மூன்றாம் நாள் இராத்திரி பன்னிரண்டு மணிக்கு இவனைப்போல் கொடிய தீங்குகளைச் செய்யக்கூடிய மனிதர்களுகெல்லாம் பயமுண்டாகும்படி இக் கைதியின் உயிர்போகும் வரையில் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கவிடவேண்டியது. இங்குள்ள ஜில்லா அதிகாரியானவர் மற்றெல்லா அலுவல்களையும் நிறுத்தி வைத்து இத்தண்டனை நிறைவேறும்படி செய்யவேண்டியது. நான் இப்பொழுது கைதியாகிய சிறுவனுக்குச் சொல்லுவது யாதெனில், அவன் உயிர் துறக்குமுன் அவனது அந்திய காலம்வரைக்கும் அவனோடுகூட இருக்கும்படி நியமிக்கப்படுகிற ஆசாரியரிடத்தில் தான் செய்த குற்றங்கள் யாவையும் ஒளிக்காமல் ஒப்புக்கொண்டு, கடவுளை மன்னிக்கும்படி பிரார்த்தித்தால்

அவனது பரகதிக்கு நலமாயிருக்கும். நானும் இச்சிறுவனுடைய ஆத்மாவை இரக்ஷிக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்து என் தீர்ப்பை முடிக்கிறேன்."

விசாரணை முடிந்தது; நியாயாதிபதிகள் தங்கள் இருப்பிடங்கள் சென்றார்கள்; ஜில்லா அதிகாரிகளினாட்கள் ஸர்வஜித்தை சிறைக்குக் கூட்டிச் சென்றார்கள். பிரபு அநங்கன் ஜூரியாக விருந்த பிரபுக்களை தானளிக்கும் விருந்துக்கிருக்கும்படி வேண்ட, அவர்களும் அதற்கிசைய, அவர்களையுபசரிக்கும் முக்கிய அலுவலிலேயே இருந்தான். பிரபு புஷ்யமித்திரரோ அங்கு விட்ட கன்று குழப்பமான மனதுடனும், பெரியபாரமான துக்கம்கொண்ட ஹிருதயத்துடனும் விசாரணையின் முடிவை கூடியமட்டும் மெதுவாய் தனது பெண்ணுக்குத் தெரிவிக்கச்சென்றார்.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி-ஏ.

மிதக்கும் வஸ்துக்கள்,

வஸ்துக்களின் பொருள் நெருக்கத்தைப் பற்றியும், மாஸை (Mass)ப் பற்றியும், கனத்தைப் பற்றியும் இதுவரையில்படித்து வந்தோம் அல்லவா? ஒரு திரவ பதார்த்தத்தில் ஒரு வஸ்துவை அமிழ்த்தினால் அவ்வஸ்துவின் எடை குறைகின்றதென்பதையும், எவ்வளவு எடைக்குறைவு உண்டாகின்றது என்பதையும் அறிந்துகொண்டோம்.

ஒரு கன அங்குலம் இரும்புத்துண்டும், ஒரு கன அங்குலம் 'கார்க்' துண்டும் நாம் எடுத்துக்கொள்வோம். இவ்விரண்டு துண்டின் கனத்தையும் ஒருகன அங்குலம் ஜலத்தின் கனத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். ஜலத்தின் கனம் கார்க்கின் கனத்தை விட அதிகம் அல்லவா? ஏன்? ஜலத்தின் கனத்தைவிட இரும்பின் கனம் அதிகம். ஜலத்தைவிட கார்க்கில் பொருள் நெருக்கம் (Density) குறைவு; இரும்பைவிட ஜலத்தில் பொருள் நெருக்கம் குறைவு; உண்மையே. ஒரு பாத்திரத்தில் ஜலம் எடுத்துக்கொண்டு கார்க் துண்டையும் இருப்புத்துண்டையும் அந்த ஜலத்தில் போடுவோம். என்னவாகின்றது ? இரும்புத்துண்டு முழுகிப்போகின்றது. கார்க் மிதக்கின்றது. கார்க்கை ஜலத்தினுள் அமிழ்த்திப் பிடித்துக்கொள்ளுங்கள் ; கையை எடுத்துவிட்டால் உடனே கார்க் அடியே நிற்பதில்லை, மேலே மிதந்து வந்து விடுகின்றது. அதற்குக் காரணத்தை விவரிக்கிறேன்.

ஜலத்தில் முழுகிவிடும் வஸ்துக்களைப்பற்றி முதலில் ஆலோசிப்போம். ஒரு இரும்புத்துண்டு ஏழு ரூபாய் எடை கனம் என்று வைத்துக்கொள்வோம். அதே அளவுள்ள ஜலம் ஒரு ரூபாய் எடை தானே இருக்கும். அது ஜலத்தில் முழுகும்போது தன்னளவே உள்ள ஜலத்தின் கனம்தானே குறைகின்றது. அதாவது ஒரு ரூபாய் எடை குறைகின்றது. ஆறு ரூபாய் எடை

இருப்பதுபோல் தோன்றுகின்றது. ஏனெனில் ஜலம் அந்த இரும்புத்துண்டை ஒரு ரூபாய் எடை பலத்துடன் மேலே தாங்குகின்றது. 14 ரூபாய் எடை உள்ள இரும்புத்துண்டு முன் நாம் எடுத்துக்கொண்டதை விட இரண்டு பங்கு பெரிதாய் இருக்கும் அல்லவா? அதை ஜலத்தில் நிறுத்தால் இரண்டு ரூபாய் எடை குறைவது போல் தோன்றும்; அதாவது 12 ரூபாய் எடை தான் இருக்கும். இவ்வாறு இரும்பின் அளவு (Volume)—இடம்—பெரிதாகப்பெரிதாக ஜலம் தாங்கும் சக்தியும் அதிகப்படுகிறது; ஏனெனில் ஜலத்தில் இருக்கும் இரும்புக்கு அதிக இடம் வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒரு வஸ்து எவ்வளவு எடையுள்ளதாயிருந்தாலும் தன் அளவுக்குச் சரியான ஜலத்தின் இடத்தை அடைத்துக்கொள்வதுபற்றி ஜலம் அதைத் தாங்கிக்கொள்ளுகின்றது.

இப்பொழுது நாம் வைத்துக்கொண்டிருக்கும் கார்க்த்துண்டை கவனிப்போம். அதன் கனம் $\frac{1}{4}$ ரூபாய் எடை ஆனால் அதே அளவுள்ள ஜலம் 1 ரூபாய் எடை இருக்கும் அல்லவா? சரி. இப்பொழுது நாம் கார்க்த்துண்டை ஜலத்தில் அமிழ்த்திப் பிடித்துக்கொண்டு இருப்பதாக வைத்துக்கொள்வோம். கார்க் $\frac{1}{4}$ ரூபாய் எடை கனத்துடன் கீழ்முகம் நோக்கிச்செல்லப் பார்க்கிறது; ஆனால் ஜலமோ அதை மேல் நோக்கித் தாங்குகின்றது. எவ்வளவு பலத்துடன் (தன் அளவுள்ள ஜலத்தின் இடத்தை அடைத்துக்கொள்வதினால்) அவ்வளவு ஜலமும் அதை மேல் நோக்கித்தள்ள முயலுமல்லவா? கார்க்கின் அளவே உள்ள ஜலத்தின் கனம் 1 ரூபாய் எடைஎன்று முன்னமே உங்களுக்குத் தெரியுமே; ஆகையால் ஜலத்தில் உள்ள கார்க்கை மேல் நோக்கித் தள்ளும் பலம் 1 ரூபாய் எடை; கார்க்கோ $\frac{1}{4}$ ரூபாய் எடை கனத்துடன் கீழே போகப் பார்க்கின்றது; நாம் தாங்கிக்கொண்டிருக்கின்றோம். கையை விட்டவுடனே ஜலம் மேல் நோக்கித்தள்ளும் பலம் கார்க்கின் கனத்தைவிட அதிகமாய் இருப்பதால் உடனே கார்க் மேலே கிளம்புகின்றது. கார்க்கை ஜலத்தினுள் நாம் வைத்துக்கொண்டிருக்கும் காலத்தில் கார்க் எவ்வளவு இருக்கிறதோ அதே அளவுள்ள ஜலம் அதைத் தாங்குகின்றது என்பதை நாம் மறக்கவே கூடாது. அது நன்றாய்த் தெரிந்தால் வஸ்துக்கள் மிதப்பதற்குக் காரணம் நன்கு விளங்கும்.

ஒருநாள் 3-வது வகுப்புக் குழந்தைகளுக்கு உபாத்தியாயர் பொருட்பாடம் நடத்திக்கொண்டிருந்தார். "இரும்பு ஜலத்தைவிட கனமானது பார். ஆகையால் நான் இந்த ஊசியை ஜலத்தில் போட்டால் அடியில் போகின்றது பார்" என்றார். அதைப்பார்த்துவிட்டு ஒரு சிறுகுழந்தை "ஐயா இது சரியே! நேற்று ஆற்றங்கரையில் ஒரு தாழைமரமும், தென்னமரமும் மிதந்து வந்ததே; அது ஜலத்தைவிட கனம் தானே? ஏன் முழுகாமல் மிதந்து வந்தன" என்று கேட்டான். இக்குழந்தையின் கேள்வி சரியான கேள்விதானே. நம்மவரில் பலருக்கும் சிறுபிராயத்தில் இந்த கஷ்டம் வருத்தியிருக்கலாம். ஊசியின் அளவுள்ள ஜலத்தின் கனத்தையும் தென்னைமரத்தின் அளவுள்ள ஜலத்தின் கனத்தையும் யோசிக்கும்படி சொன்னால் குழந்தை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தையும் அறிந்து கொள்வான். ஊசியில்லாவிட்டால் இன்னும் சற்று பெரிதாயிருக்கும் இரும்பின் கனத்தையும் அதே அளவுள்ள ஜலத்தின் கனத்தையும் நேரே பார்க்கும்படி செய்யலாம். தென்னைமரத்தையும் அதே அளவுள்ள ஜலத்தையும் நிறுத்துக்காட்டுவது அசாத்தியமா

றையும் ஒருபெரிய, சோளத்தட்டையும் அதே அளவுள்ள ஜலத்தின் கனத்தையும் காட்டிவிட்டு, ஜலத்தின் உள் இருக்கும் ஒவ்வொரு வஸ்துவையும் அதே அளவுள்ள ஜலத்தின் பலம் மேல் நோக்கித் தள்ளும் என்பதாக விவரித்தால் குழந்தை இரும்புஉள்ளே முழுகவேண்டிய காரணத்தையும் சோளத்தட்டு மிதக்கவேண்டிய காரணத்தையும் அறிந்துகொள்வான்.

ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

கமலாலயம்.

பாத்திர விவரம்.

தாராபுரியில் புதுவீதியில் சுமார் நடுமத்தியில் தென்புறம் நோக்கி ஓர் உயர்ந்த மாளிகை நிற்கக் காணலாம். அம்மாளிகைக்கு மேற்கட்டு இரண்டு உண்டு. தரையில் உள்ள கட்டிடத்தோடு மூன்று வரிசைகள். இவற்றுள் நடுக்கட்டில் முன்புறம் வைத்து இருக்கும் மயில்களைப் பாருங்கள்; ஒவ்வொன்றும் எவ்வளவு அழகாய் ஒவ்வொரு பூங்கொத்தைக் கவ்விக்கொண்டு நிற்கின்றன. இவ்விரண்டு பக்ஷிகளுக்கும் நடுவே ஒரு பெரிய தாமரை மலர்ந்து விரிந்து இருக்கின்றது. அக்கமலத்தின் தலையில் முன்சொன்ன பூங்கொத்துக்கள் இரண்டும் வந்து கூடுகின்றன. இவற்றின் ஊடே பூக்களோடு பூக்களாய் வரைந்து இருக்கும் எழுத்துக்களை கவனியுங்கள். 'கமலாலயம்'என்று எழுதியிருக்கின்றதல்லவா ? தாராநகரில் இத்தெருவழியே நடப்பவர் இம்மாளிகையை கவனியாது போவதும் உண்டோ ! மயிலின் அழகைப்பார்த்து அவ்வழகில் ஈடுபட்டு அதையே பார்த்தவண்ணமாய் எவ்வளவு பேர் நின்றுவிடுகின்றனர் ! புதிதாய் தாராபுரிக்கு வந்த நாட்டுப்புறத்தார் சிலர் "இவ்வளவு பெரிய தாமரையை தினமும் யார் கொண்டு வந்து இம்மாடத்தில் வைக்கிறார்கள்" என்று யோசிப்பதுண்டு. வழியில் போகும் குழந்தைகள் மயிலையும், பூங்கொத்தையும், கமலத்தையும் கண்டு மகிழ்ந்து "தாமரைப்பூவை மயில்கள் பூங்கொத்தால் அடிக்கிறது ! பார் ! என்று தம்பெற்றோருடைய கவனத்தை இழுப்பார்கள் ! வேறு சில குழந்தைகள் "பூங்கொத்தைக்கொண்டு மயில்கள் தாமரையை அடிப்பானேன்? தாமரை என்ன தப்பிதம்செய்தது ?" என்று எண்ணித்திகைத்து நிற்பார்கள். சில பெரியோர் "இக்கட்டிடம் எவன் நிருமித்ததோ; தேவலோகத்து மாளிகைகள் இவ்விதம் தான் இருக்கும் போலும் !!" என்பார்கள். சிலர் மஹாராஜர்கள் குடியிருக்கக்கட்டிய வீட்டைப் பார் கோட்டையைப்போல !! மனிதன் ஒண்டியிருக்க இப்படிப்பட்ட வீடும் வேண்டுமா ?" என்று சொல்லுவார்கள்.

இப்படியாக வீதியில் போகும் ஒவ்வொருவருடையமனத்தையும் கவர்ந்து அவரவர்மனப்போக்குக்குத்தக்கபடி பேசச்செய்யும், நமதுகமலாலயம். உள்ளூர் ஜனங்கள் ஆகட்டும், வெளியூரிலிருந்து யாத்திரை வந்திருக்கும் வேறு ஜனங்கள் ஆகட்டும், தாராநகரில் புதுத்தெரு வழியே போனால் கமலாலயத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு திகைத்து நில்லாமல் போதல் அரிது.

அங்ஙனம் போவோர் இருப்பின் அவருக்கு 'சர்வேந்திரியங்களுக்கும் பிரதானமான இந்திரியம்' சற்று மத்தியமம் என்றே தான் சொல்லவேண்டும்; இல்லையேல் நாகரீகமற்ற மிருகங்களோடு ஒப்பிடக்கூடிய மனிதர் குழாத்தில் சேர்ந்தவன் என்றாலும் சரியே; இல்லாவிட்டால், தற்கால நிலைமைகளை முற்றிலும் மறக்கச்செய்யும் விசேஷமான தொரு மனக்கவலை அவரை வருத்துகிறதென்றாவது தான் சொல்லவேண்டும். ஆயினும் நான் உங்களுக்குச் சொல்லவேண்டுவது ஒன்று உண்டு. தாமரையுடன் பூங்கொத்துக்கொண்டு சண்டைசெய்ய வேண்டுமென்று பலநாள் தவம்செய்து வரம்பெற்றுக்கொண்டு வரவில்லை கமலாலயத்து மயில்கள் இரண்டும்!! தினமும் பிரயாசைப்பட்டுப் புதிது புதிதாய்த் தாமரைமலரை ஒருவரும் மேற்கட்டில் கொண்டு வந்து வைப்பதுமில்லை! இவையெல்லாம் சிற்பியால் செய்யப்பட்டுள்ள பதுமைகள் என்று நண்பர்கள் அறிந்துகொண்டு இருக்கலாம். ஆம்! பதுமைகள் தாம்!! ஆனால் முதலில் பார்த்தவுடன் அவைகள் உயிருடன் இருக்கும் மயில்கள் போலவும், தாமரை அப்பொழுது தான் மலர்ந்த புஷ்பம் போலவும் ஒவ்வொருவருக்கும் தோன்றும். சாதாரணமாய்க் குளங்களில் பூக்கும் தாமரைக்கும் கமலாலயத்து மாடத்தில் விளங்கும் தாமரைக்கும் ஒரு வித்தியாசமுண்டு. குளத்துத் தாமரை சாயங்கால வேளையில் குவிந்து வாடிவிடும்; கமலாலயத்துத் தாமரையோ அங்ஙனம் வாடுவதில்லை; சூரியன் அஸ்தமித்தானே ஒழிய ஒரே அடியாய்ப் போய் விடவில்லையே; மறுபடியும் உதிப்பான் என்ற, நிச்சயத்துடன், அவன் வரவை மலர்ந்த முகத்துடன், எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறது. இந்த விசேஷஞானம் கமலாலயத்துத் தாமரைக்கு இருப்பதுபற்றியே, இந்த "சஞ்சலமில்லாத ஞானி"யை ஒவ்வொருவரும் சற்று நின்று தரிசனஞ்செய்து விட்டுப்போகிறார்கள்!!

அம்மாளிகை வாசலில் திண்ணையின்கீழ் ஒரு சிறு மரநாற்காலி போட்டிருக்கின்றதே, அது தான் நான் வழக்கமாய் உட்கார்ந்துகொண்டிருக்கும் இடம். ஆகையால் என் உத்தியோகம் உங்களுக்கு விளங்குகின்றதல்லவா? நான்தான் இம்மாளிகைவாயில் காப்போன். இப்பெரும் மாளிகையையும் அதன் மாடங்களையும் தக்கபடி வர்ணிக்க என்னைப்போன்ற பேதையால் கூடுமா? ஆனால் எப்பொழுதும் மாளிகைவாயிலில் உட்கார்ந்து, இப்புறமும் அப்புறமும் போவோரைக்கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு, இருப்பதாலும், எதிர் நின்று மாளிகையைப்பற்றிப் பேசுபவரைக்கேட்டுக் கொண்டிருப்பதாலும், ஏதோசில வார்த்தைகளைப் பேசத் துணிந்தேன். இப்பொழுது நடுத்தெருவில் நின்றுகொண்டு, பக்கத்தில் வரும் குதிரைவண்டியையுங் கூட கவனியாது, மயில்களையே உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும் சிறு பிள்ளையைப்போலவே, நானும்உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த காலம்உண்டு. இப்பொழுதோ தினந்தினம் மாளிகையின் வாசலில் உட்கார்ந்து இருந்தபோதிலும், எனக்குக் கொஞ்சமேனும் சலித்துப்போகவில்லை; இன்றைக்கும் அம்மயில்களின் அழகு குழந்தைப் பருவத்தில் என் மனதை எவ்வாறு கவர்ந்ததோ அவ்வாறே என் மனத்தை இழுக்கின்றது.

இம்மாளிகை அனேக வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டதாம். விஜயம் நகரம் அழிந்தபின்பு, தாரா நகரத்தை ஆண்டுவந்த ஒரு நாயக்கப் பிரபுவால் கட்டப்பட்டதென்று சிலருடைய எண்ணம். இம்மாளிகையில், அவர் மந்திரிகளோடு ராஜ்யபாரம்செய்வது வழக்கமாம். சிலர் இது அவ்வளவு பழய

கட்டிடம் இல்லையென்றும், நூறுவருஷங்களுக்கு முன்தான் ஏற்பட்டதென்றும், மேல் நிற்கும் மயில்களும், தாமரைகளும் மட்டும் எங்கேயோ ஒரு பழயகட்டிடத்திலிருந்து, கொண்டுவரப்பட்டன வென்றும் சொல்லுகின்றனர். எப்படி இருப்பினும் இருக்கட்டும். தாரா நகரத்துக்கு ஓர் திலகம் போலவும், பழய கட்டிடங்களின் பெருமையைக் காட்டுவதற்கு ஒரு சாட்சியாகவும், நிலைபெற்று நிற்கிறது கமலாலயம் !! நீங்கள் தாராநகரம்வந்து, கமலாலயத்தை நேரில் பார்த்தால், நான் இப்பொழுது சொல்லியிருப்பதைவிட பதின்மடங்கு அதிகமாயிருப்பதாகவே தோன்றும் அதன் அழகு !!

நான் வாயிலில் காவலிருக்கும்வரையில் யார்வேண்டுமானாலும் தடையின்றி மாளிகையின் உள்ளே நுழைந்து போய்ப்பார்க்கலாம். உள்ளே நுழைந்ததும், இடதுகைப்புறத்தில் இருக்கிற பெரிய அறைக்குள் நுழைவோம். என்ன அலங்காரம் ! என்ன அழகு!! இவ்வளவு ஆசனங்கள் யாருக்கு ? இங்கு ஏதாவது சபைகூடப் போகிறதோ? என்ன விசேஷம் ? சொல்லுகிறேன் சாவகாசமாய்! இப்பொழுது சுற்றிலும் பாருங்கள் ! சுவர்களில் எவ்வளவு படங்கள்! இவ்வரிசை முழுவதும் ரவிவர்மா அவர்கள் எழுதிய திவ்வியப் படங்கள். கிழக்குப்புறம் நோக்கி மாட்டியுள்ள 12 - பெரிய படங்களும் கும்பகோணத்திலிருந்து வரவழைத்தவை. நடுவில் நிற்கும் நடனஸபாபதியை மட்டும் பார்த்துக்கொண்டு நின்றால் போதும். பாதத்தில் உள்ள நூபுரமும் கிண்கிணியும், இடுப்பில் புலித்தோலும், கையில் சூலமும், கபாலமும், அக்னியும், உடுக்கையும், கழுத்தில் ஆலகால விஷத்தின் கறுப்பும் காதில் பன்னக குண்டலமும், முக்கண்ணும், சடையில் கங்கையும் கொண்டு என்னப்பன் ஆடும் தாண்டவத்தைப் பார்த்து களிகூருங்கள் !! இப்படம் ஒன்றையே பார்த்து பார்த்து நின்றாலும் சலிக்காது. தென்புறத்துச் சுவற்றில் உள்ள 20 - படங்களும் பம்பாய்ப் படங்கள். எசோதை கிருஷ்ணனை உரலில் கட்டியிருக்கும் படம் எவ்வளவு விநோதம் பார்த்தீர்களா ? மேற்புறம் பார்த்து மாட்டியுளளன சில ஆங்கிலேயப் படங்கள். அவற்றுள் நடுவில் இருப்பது நமது சக்கிரவர்த்தியார். அவருக்கு வலப்புறம் சக்கிரவர்த்தியார் திருமகன், நமது இளவரசு, அப்பால் இருப்பது சக்கிரவர்த்தியார் தாயார், உலகம் புகழும் நமது அன்னை விக்டோரியா மஹாராணி. மற்றன மஹமதிய சக்கிரவர்த்திகளின் படங்கள். அவற்றுள் நான்காவதைப் பாருங்கள். அவர்தான் அக்பர் சக்கிரவர்த்தி. இங்கே வரும் ஒவ்வொருவரும் அக்பர் படத்தைப்பாராமல் போவதேயில்லை. மற்றும் சில வங்காளப்படங்கள். என்ன விநோதம் ! ! கீழே விரித்து இருக்கும் இரத்தின கம்பளம் காஷ்மீர தேசத்து, நடுவே பல ஆசனங்கள் இருக்கின்றன என்பதை முன்னமேயே பார்த்தீர்கள் அல்லவா ; புஷ்பம், தாம்பூலம், சந்தனம் இவைகளும் திட்டமாய் எடுத்து வைத்திருப்பதால் இங்கு ஒரு சபை கூடும் என்பது நிச்சயமாகின்றது. இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவ்வறையில் ஒரு சிறு சபை கூடும்.

இதோ உட்புறமிருந்து ஒரு கதவைத் திறந்துகொண்டு வருகிறாளே ஒரு பெண்மணி; இவள்தான் ஞானம்பிகை, இம்மாளிகைக்கு எஜமானரான பிரேமநாதருடைய மகள், இவளுக்கு இப்பொழுது வயது 16, சிறந்த புத்திசாலி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலான பாஷைகள் படித்து இருக்கிறாள். இங்கிலீஷும் கொஞ்சம் வரும்". பிரேமநாதருக்கு இவள்

ஒரே பெண் பிள்ளை ஒருவன் உண்டு. அவன் ஞானத்தைவிட இரண்டுவயது பெரியவன். பட்டணத்தில் பிரஸிடென்ஸி காலேஜில் படிக்கிறான். இவ்விரண்டு குழந்தைகளைத் தவிர வேறு ஒரு உறவினரும் பிரேமநாதருக்குக் கிடையாது. இப்பொழுது உள்ளே புகுவது சாவித்திரியம்மை, ஞானம்பிகையின் தாயார். சாவித்திரியம்மை பழையகாலத்து ஸ்திரீ, அவளுக்கு எழுதவும் தெரியாது படிக்கவும் தெரியாது. ஆனால் சாவித்திரியம்மைக்குத் தெரிந்த பாட்டு உலகத்தில் ஒருவருக்கும் தெரியாது என்றுதான் சொல்லவேண்டும். பொறுமையும், அமைதியும், எல்லாரிடமும் ஒரே விதமான அன்பும் சொல்லிமுடியாது. இவர்களுடைய குணவிசேஷம் இன்னும் பலதடவைகளில் உங்களுக்கு நன்கு விளங்கும்.

சாவித்திரியம்மை:—"ஞானம், ஏன் இன்னும் ஒருவரையும் காணோம்? என்று சுவற்றில் சாய்ந்துகொண்டு வெற்றிலைத் தட்டைச் தன்பால் இழுத்துக்கொள்ளுகிறாள். மஹா கவனத்துடன் ஒரு காகிதச் சுருளைப் படித்துக் கொண்டிருக்கும் ஞானம், தன் அன்னையை நிமிர்ந்து பார்த்து, பிறகு கடிகாரத்தைப் பார்த்த வண்ணமாய் "இன்னும் மணி மூன்றாகவில்லையே, அம்மா, வந்துவிடுவார்கள் சீக்கிரம்" என்று சொல்லிவிட்டு முன்போலவே படிக்கத்தொடங்கி விட்டாள். ஞானம்பிகை படிக்கட்டும், சாவித்திரியம்மை வெற்றிலை மெல்லட்டும். நாம் மாளிகையைச் சுற்றிவருவோம்.

இவ்வழியின் எதிரே இருப்பதுதான் கூடம். இச்சுவர்களும் படங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. கூடத்து நடுவே தூங்கும் ஊஞ்சற் பலகை கருங்காலி மரத்தால் செய்யப்பெற்றது; இழைப்போ மிக நயம், சுவற்றில் தொங்கும் படங்கள் எல்லாம் பலகையில் தெரிகின்றன பாருங்கள்!! இப்பலகையில்தான் பிரேமநாதர் மாலைப்பொழுதில் சற்று சயனிப்பார். அப்பால் உள்ளது சமையல் கட்டு; பின்புறம் பூந்தோட்டம். பூந்தோட்டத்துக்கு ரோஜாப்பூ வேலி போட்டு இருக்கின்றது. உள்ளே போய்ப் பார்ப்பின் எவ்வளவு வகைப் பூஞ்செடிகள், சீமைச் செடிகளும் கொடிகளும் எத்தனை விதம்! நடுவில் நிற்பது "கொடி வீடு". உள்ளே 3, 4, நாற்காலி போட்டு இருக்கின்றன. வேலை இல்லாத காலத்தில் ஞானம்பாள் இவ்விடத்தில்தான் வந்து படிப்பதும் உல்லாசமாய் உலாவுவதும் வழக்கம்.

அப்பால் செடிகளுக்கு நீர்வார்க்கின்றானே அவன் எனது தமக்கை மகன். எங்கள் ஞானம்பிகை என்னசெடி வேண்டுமென்றாலும் உடனே கொண்டுவந்து வைத்துப் பயிர்செய்துவிடுவான். அவன்பெயர் மாரன். ரீடிங் ரூம், பள்ளிக்கூடம், தாலூகா கச்சேரி முதலான இடங்களில் என்ன செடிகள் வளர்கின்றன; எவை பூத்து இருக்கின்றன. எவை அதிக நாள் வளரும் - என்ற பல விஷயங்களும் மாரனுக்கு நன்றாய்த்தெரியும். மூன்று வருஷத்துக்குமுன், நான் தான் அவனை வேலையில் கொண்டுவந்து சேர்த்தினேன். அப்பொழுது 11 இப்பொழுது 14 வயது ஆச்சுது. அவனைப் பார்த்தால் வயது 18 அல்லது 20 இருக்கலாம் என்று கூட சந்தேகிப்பார்கள். என் தமக்கை மகனாய் இல்லாவிட்டால் நானும் அப்படிதான் எண்ணுவேன். அவன் அப்படி தோன்றுவது அவனுடைய பிசகன்று. எங்கள் எஜமானன் வீட்டுச்சோற்றையும், ஞானம்பிகையின் தோட்டக்காற்றையும், தோட்டத்துக்கு நீர் இறைப்பதினால் உண்டாகும் தேகப்பயிற்சியையும், குற்றம் கூற

வேண்டுமே ஒழிய மாரனுல் யாதொரு வஞ்சனையுமில்லை!! எலும்பும் தோலு மாய் இருக்கிற ஒரு சேவகனைக் கமலாலயத்தில் கொண்டுவந்து விட்டால் எட்டுநாளில் அவன் ராக்ஷஸனைப்போல் 'ஊதிப்போய்' விடுவான்; இது கம லாலயத்து பூசாரமும் காற்று விசேஷமும்! நாங்கள் எல்லாம் 'கொழுகொழு' என்று இருப்பதற்கு காரணம். பாட்டு சத்தம்கேட்கின்றது. சபை கூடிவிட் டது, போவோம் அவ்வறைக்கு.

(இன்னும் வரும்) ☞ வாயில் காப்போன்.

சில இந்து குடும்பங்களின் ஸ்திதி.

தற்காலம் நம் தேசத்தில் சில குடும்பங்களில் சொல்ல முடியாத அனர்த்தங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கெடுத்து ரைப்போம். ஓர்ப்படிமார்களும் இதர பந்துக்களும் ஒரே வீட்டில் வசிக்க வேண்டி வருவதனுல், சிலவிடங்களில், குடும்பத்தி லிருக்கப்பட்டவர்களுள் ஒருவர் பேரில் ஒருவருக்கு இருக்கவேண்டிய அன்பு இருப்பதில்லை.

எல்லோரும் ஒரே குடும்பமாயிருக்க வேண்டுமென்கிற குடும்பங் களின் கருத்தென்னவென்றால், எல்லோரும் ஒற்றுமையுடனும், சகோ தர பாவத்துடனுமிருந்து, குடும்ப க்ஷேமலாபத்தைப்பற்றி சரிவர கவ னித்துப் பாடுபடவேண்டு மென்பதுதான். ஆனல், பல விடங்களில்மேல் சொன்னவிதம் இருப்பதற்கு மாருக, குடும்பத்தில் ஒற்றுமை என்பதே காண்பதரிதா யிருக்கின்றது. அப்பேர்ப்பட்ட விடங்களில், முக்கியமாய் ஸ்திரீகள்தான். ஒருவர்பேரிலொருவர் த்வேஷ பாவ முடையவர்களாய், சண்டை செய்யத் தலைப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஒரு சமயம், மேலு க்கு கண்ணிய முடையவர்களைப்போல நடந்து கொண்டபோதிலும், மன தில் த்வேஷபாவம்தான் பிரபலமா யிருக்கின்றது. சாமான்னியமாய் புரு ஷர்களைவிட, ஸ்திரீகள் அஞ்ஞான முடையவர்க ளாகையால் அற்பசொற்ப விஷயங்களுக்கும்கூட அபிப்பிராய பேதத்தினுல் ஸ்திரீகளே சண்டை போடுவதை நான் பலதடவைகளில் கண்டிருக்கிறேன். அத்தகையவர்கள் குடும்ப விஷயத்தைப் பற்றி எப்படி கவலை எடுத்துக்கொள்ள முயலுவார் கள்?

மொத்தமாய் வரவைவிட செலவை கொஞ்சம் குறைத்து, ஆபத்துக் காலத்தில் உதவும்பொருட்டு, பொருளை சேகரித்து வைக்க வேண்டுமானல் எல்லோரும் ஒற்றுமையுட னிருந்து, குடும்ப விஷயத்தைப் பற்றி எல்லோ ரும் ஒரேவிதமான கவலையை எடுத்துக்கொண்டா லன்றி முடியாதென்று எனது அற்ப புத்தியில் படுகின்றது.

அது நிற்க, சில குடும்பங்களில் எல்லா அனர்த்தங்களுடன், சிலஸ்திரீக ளிடத்தில் சோரபுத்தியும் கூட (திருட்டுதனம்) காணப்படுகின்றது. சுய

நலமே பிரதானமெனக் கருதி, குடும்பத் தலைவிகளாகிய ஸ்திரீகள் மற்றவர்கள் அறியாவண்ணம், வீட்டு நெல்லு, அரிசி, முதலிய வஸ்துக்களை அண்டை அசல்வீட்டு ஸ்திரீகளுக்கு விற்றுவிட்டுபணத்தைசேகரித்துக் கொள்ளுகிறார்கள்.

"வீட்டுத்திருடனை கண்டு பிடிக்க ஈசுவரனாலும் முடியாது." ஒருஸ்திரீ இவ்வாறு செய்துவருவதைக் கண்டு மற்றவர்களும் மெல்ல மெல்ல அவ்வாறு செய்யத் துணிவுகொள்ளுகிறார்கள். மேலும் சில குடும்பங்களில் ஸ்திரீகள் திருட்டு நகைகளை இரகசியமாய், அடமானம் வைத்துக்கொண்டு பணத்தைக்கொடுத்து, சொற்ப லாபத்திற்காக மோசம் போகிறார்கள். ஆகையால் இவ்விதக் குடும்பங்கள் தனவிஷயத்தில் அபிவிருத்தி அடைவதற்கு மாறாக நாளடைவில் க்ஷீணதசை அடைந்துவருமென்பதற்குச் சந்தேகமே கிடையாது.

மேற்சொன்ன அனர்த்தங்களுக் கெல்லாம் பெரும்பாலும் புருஷர்கள் குடும்ப விஷயத்தில் பராமுகமா யிருப்பதுதான் ஒரு முக்கியகாரணமென்று சொல்லலாம். ஒவ்வொரு புருஷனும் தன்குடும்பத்தைப்பற்றி தகுந்த கவலையை யெடுத்துக்கொண்டு ஸ்திரீகளுக்கு நல்லறிவி புகட்டி, நன்னடக்கை யுடையவர்களாக செய்வார்களாகில், அக்குடும்பங்கள் எவ்வளவு சுகசந்தோஷமுடையதாயிருக்கும்.

அநேகமாய் எல்லாரும் சேர்ந்திருக்கும் குடும்பங்களில்தான், கெட்ட விஷயங்கள் அதிகமாய் காணப்படுகின்றன. வெவ்வேறு குடித்தனம்செய்வார்களாகில் மேற்சொன்ன அனர்த்தங்கள் ஒருவாறு குறையக்கூடும்.

பிறர் அநுபவியாவண்ணம், தானும் தன் குழந்தைகள்மாத்திரமே சகல சுகத்தையும் அனுபவிக்க வேண்டுமென்கிற துரெண்ணத்துடன், சில அற்ப சுபாவமுள்ள ஸ்திரீகள், பிறருக்கு அசௌகரிய முண்டாக்குவதிலேயே கண்ணா யிருக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு குடித்தனம் செய்தால், இத்தகைய இழிவான செயல்களைச் செய்யவேண்டிய ஆவசியமிராது. ஆகையால், குடும்பத்தில் பெரும் அனர்த்தங்கள் நேரிட்டு மனஸ்தாப முண்டாவதற்குமுன், மரியாதையுடன் அவரவர்கள் தூர விலகிவிடுவார்களாகில், எல்லோர் மனதிற்கும் வியாகூல மில்லாமலிருப்பது மல்லாமல் பார்ப்பவர்களுக்கும் கௌரமாயிருக்கும். ஆகையால் சாதாரணமாய் வெவ்வேறுகுடித்தனங்கள் செய்யப்பட்ட இடங்களில், நம் இந்து குடும்பங்களில் வழக்கமாய் நடந்தேறிவரும் அனர்த்தங்கள் ஒருவாறு குறைந்து, அக்குடும்பங்கள் நாகரீக முள்ளதா யிருக்குமென்று எனது அற்ப புத்தியில் படுகின்றது.

☞ மங்களாபாய்.

மீராபாய்.

கிழக்கில் கங்காநதிக்கரையிலிருந்து மேற்கிலுள்ள ஹிந்துநதிக்கரை வரையிலும், வடக்கிலுள்ள ஹிமயப்பர்வதம்முதற்கொண்டு தெற்கிலுள்ள விந்தியமலைவரைக்கும், ஒருவர் சுற்றுப்பிரயாணம் செய்துவந்தால் ஹிந்தி பாஷையிலியற்றிய திவ்வியமான பாடல்களைக் கேட்கலாம். பகல்காலத்தில் இடைப்பிள்ளைகள் மாடுகளைமேய்த்துக்கொண்டு வரும்பொழுது இப்பாடல்களை காதுக்கு இனிமையாகப்பாடுவதையும், பக்தி சிரோன்மணிகள் பூஜாகாலத்தில் மிக்க சிரத்தையுடனும் ஆழ்ந்த பக்தியுடனும் காதுக்கு இனிமையாகிய இப்பாடல்களை உச்சரிப்பதையும், பேர்பெற்ற சங்கீதவித்வான்கள் பற்பல இராகத்துடன் இப்பாடல்களைப் பாடுவதையும், கேட்கலாம். அங்குள்ளவர்கள் யாவரும் மீராவின் பெயரைக்குறித்துப் பாடுகிறார்கள். ஒவ்வொரு பாட்டிலும் மீராபாய்யென்ற திவ்ய நாமமிருக்கும்.

இவள் யார்? பிரயாணி ஒருவன் எவரையாவது சந்தித்து—பெண்ணையோ, பையனையோ, கிழவனையோ, கிழவியையோ,—"ஐயா, அம்மா, நீங்கள் பாடும் பாடல்களில் மீராபாய் என்று வருகிறதே. இம்மாது யார் ?" என்று கேட்பீர்களானால், அவர்கள் உடனே "ஓ ஐயா, அம்மகாபதிவிரதா சிரோன்மணி ஒரு சிறந்த இரத்தினம்போல் விளங்கின தபஸ்வினி" என்று சொல்லுவார்கள். மீராபாய் என்ற திவ்யநாமம்—சிறியவர்களுக்கும் கிழவர்களுக்கும், மனிதருக்கும், ஸ்திரீகளுக்கும் தெரியும். தெரிந்திருப்பது மாத்திரமல்ல, இந்து சாதிக்கே ஒரு திலகம்போல் விளங்கின தேவதூதி என்று யாவரும் எண்ணிவியந்து, விருப்பத்துடன் வணங்கியும், ஆராதித்தும் வருகிறார்கள்.

ஸ்திரீகளுக்குள் முதிர்ந்த பக்தியுள்ளவளாயிருந்தாள். மேலும் இந்தியாவிலுள்ள கவிசிரேஷ்டர்களில் ஒருவளாகவும் விளங்கிவந்தாள். பராக்கிரமம் பொருந்திய ராஜஸ்தானத்தில் கீர்த்திபெற்ற பிரதான தேசத்தின்ராணியார், துறவறம் பூண்டு தமது பிரியமுள்ள கணவரின் அழகான அரண்மனையை விட்டகன்று இந்தியாவில் எப்பொழுதும் கேட்டிராத தாம் அன்புடன் பூஜித்துவந்த பகவானைப்பற்றி சதாபாடிக்கொண்டேயிருந்தாள். கடவுள்தியானமே முக்கியமாக அவள்மனதில் குடிகொண்டிருந்தது. அவள் பக்திக்கும் தேவதா ஆராதனைக்கும் அளவு கிடையவே கிடையாது. சிறந்த புத்தியும், ஞானமும் பொருந்தி, மகாதபஸ்வனியாயிருந்தாள்.

ராஜஸ்தானத்தில் குன்றுகள் அதிகம். இத்தேசத்தில் வீரபராக்கிரமமுள்ளவர்களிருந்தார்கள். இங்கு மேரதா என்ற சிறு கிராமத்தில் இம்மாது ஜனித்தாள். இவள் ஜனித்த குடும்பமோ கௌரவம்பொருந்தியது. பெருந்தன்மையும், செல்வமும் படைத்தகுடும்பம். இக்குடும்பத்தாரை அண்டிபிழைத்தவர் அநேகம். தானதர்மத்தில் இக்குடும்பத்தாருக்கு ஈடு எவரும் அக்காலத்திலில்லை. இப்பெண்மணியைப்போல் அழகு வாய்ந்தவள் ஒருவருமில்லை. ஆகையால் ராஜபுதன முழுவதும் இவளை லிலிவிஷ்பமென்றே எண்ணினர்களாம்.

சித்தூர் மகாராணாவை ராஜ புதனத்திலுள்ள அழகிற்சிறந்த பெண்மணிகள்தான் எப்பொழுதும் மணம் புரிந்துவந்தார்கள். இவர் இராஜபுத்திரர்களுக்கெல்லாம் சிரேஷ்டமான தலைவர். சித்தூர் இளவரசராகிய கும்பாசிங் அவர்களை மீராபாய் மணம் புரிந்தாள். இவ்விருவர்களும் கவிகளாகவே

ஜனித்தார்கள். பாலியப்பருவத்தில் இருவரும் கவிகளை இயற்றியும் அவைகளை இராகத்துடன் பாடிக்கொண்டும் வந்தார்களாம். ஆனால் வரவர இருவரும் இயற்றும் பாடல்களுக்கு வித்யாசம் ஏற்பட்டது. இளவரசர் லௌகிக விஷயங்களில் தவழ்ந்துகொண்டிருந்தார். இளவரசியாரோ கடவுளைக் குறித்தும் அவருடைய அபாரசக்தியைக்குறித்து வர்ணித்துக்கொண்டும் அவருடைய நித்யகல்யாணகுணங்களை விவரித்துப் புகழ்ந்துகொண்டுமிருந்தாள்.

ஸ்ரீ கிருஷ்ணபகவானைப்பற்றி பாகவதம் முழுமையும் படித்துவந்தாள். ப்ருந்தாவனத்தில் இடைப்பையன் ரூபமாக பகவான் இருக்கிறார் என்று உணர்ந்தாள். ஜகத்ரக்ஷகராகிய அன்பே உருவெடுத்தாற்போன்ற பகவானை நேசிக்காமலிருந்தால் இம்மையிலும் சரி, பரலோகத்திலும் சரி ஒருவரும் சந்துஷ்டியாயிருக்க முடியாதென்பதையும் தெரிந்துகொண்டாள். ஸ்ரீ கிருஷ்ண பகவானை,

"கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியனைக் கண்டோம்
தொண்டீரெல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந்துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடிநின்றாடிப் பரந்து திரிகின்றனவே"

என்றுபாடி சதா அவரையே ஸ்துதிசெய்துகொண்டுவந்தாள். இப்படிச்செய்துவந்தமையால் அவரை செவ்வனே அறிந்துகொண்டாள். கோகுலத்திலுள்ள பணிவிடைப் பெண்களில் தானொருவளென்று உணர்ந்தாள். அன்புக்கிருப்பிடமாகிய தேவலோகத்திற்குதான் போய்விட்டதாகவும் உணர்ந்தாள். இவள் இயற்றிய பாடல்களெல்லாம் கடவுளைக்குறித்தே—ப்ருந்தாவனத்திலுள்ள இடைப்பையனைப்பற்றிதான். மோக்ஷசாதனம் வேண்டுமானால் பகவானிடத்தில் பரிபூர்ண அன்பும் பக்தியும்தான் என்றதை இவ்விளவரசியாரின் பாடல்கள் வெளிப்படையாக மனிதர்களுக்கு அறிவையுண்டாக்கின. எப்பொழுதும் பகவானை ஸ்மரணை செய்யாமலிருப்பதே கிடையாது. "ஈசனுக்கொப்பு இங்கொன்றுமில்லை" என்றுணர்ந்து அவரிடத்தில் "அன்பு இருந்தால் ஆகாதும் ஆகும்" என்றதைக் கைப்பிடித்து "அன்புள்ள குணம் அலையில்லா நதி" என்பதைப்போலிருந்தாள். இவ்விளம் ராஜகன்னிகையின் விசேஷ பக்தியைப்பற்றி அநேகர் வியந்து பேசிக்கொண்டிருந்தார்கள். சிலர் இப்பெண்மணி வெகுகாலம் ஜீவித்திருக்கவேண்டுமென்று கடவுளை வாழ்த்தி வந்தார்கள். பக்தி என்ற ரசம் சிறிதுமில்லாதவருக்கும் இப்பெண்மணியால் பக்தியுண்டானது. இது சகஜம்தான். தாய்மார்களும், தகப்பன்மார்களும் தினே தினே தங்கள் கிரகத்தில் கடவுளைப் பூஜித்துவரவேண்டும், அவரை ஸ்துதிசெய்துகொண்டு வரவேண்டும். அவருடைய அபாரசக்தியின் பெருமையைப்பற்றி சிறுகதைகளாக சிறு குழந்தைகளுக்குச் சொல்லிக்கொண்டு வரவேண்டும். இவ்விதம் செய்துவந்தால் பகவானிடத்தில் பக்தியும், அன்பும் சிறு குழந்தைகளுக்குண்டாகும். அவரை எப்பொழுதும் நினைத்துக்கொண்டும் வணங்கிக்கொண்டும் வருவார்கள். சிறு குழந்தைகள் பெரியவர்களாய்விட்டால் ஈஸ்வர ஞானமுடையவர்களாயிருப்பார்களே யொழிய நாஸ்திகராய் யிருக்கமாட்டார்கள். நன்னடக்கையும், நற்குணங்களுமுண்டாகும்.

இவ்விதம் இருவரும் இல்லறம் நடத்திக்கொண்டு வருகையில் பெரிய ராணா அவர்கள் இறந்துபோகவே, மீராபாயின் கணவர் அரசராய்விட்டார். மீராபாயும் ராணி ஆய்விட்டார்கள். ஆனால் என்ன? தமக்கு இராஜ்யாதிகாரம்

கூடகிடைத்ததே என்று எண்ணி கர்வங்கொண்டாளா? அல்லது ராணியார் தமக்குரிய ஆடம்பரங்கள் தமக்கும் வேண்டியதென்று கோரினளா? இல்லவே இல்லை, "தாழ்ந்து பணிதலே தலைமை ஆகும்" என்றாற்போல் தம்கணவன் சொற்படி நடந்து வந்ததுமல்லாமல், கடவுளை முன்னைவிட அதிகம் வணங்கி பூசிக்கவும் ஆரம்பித்து விட்டாள். இவளது கணவரும் இவளது இஷ்டத்தை நிறைவேற்றும்பொருட்டு அவளுக்கு வேண்டிய சவுகரியங்களை யெல்லாம் செய்துவந்தார். மதப்பற்று—தம்மனதில் குடிகொண்ட விசேஷ அன்பும்—தமக்கு அருளால் வந்த ஆழ்ந்த பக்தியும்—இவ்வுலகத்தில் யாதொரு பற்றுமின்றி பேரின்பத்தை யடையவேண்டிய வழிகளைத் தேடு மார்க்கத்தைக் கண்டுபிடிக்கத் தூண்டிற்று. ராணியார் கிரககிருத்தியங்களில் பிரவேசிக்கவில்லை, தமக்கு விலையுயர்ந்த நகை, புடவை முதலியவைகளும் நல்ல உருசியுள்ள ஆகாராதிகளும் வேண்டுமென்று சிறிதேனும் விரும்பவேயில்லை. ஒவ்வொரு பகலிலும் இராத்திரியிலும் தமது தோழிகளுடனும் வேலைக்காரிகளுடனும் சேர்ந்து கடவுள் நாமத்தை யுச்சரிப்பதிலேயே காலத்தைக் கழித்துவந்தாள். அவள் அவ்விதம்செய்ய தாமியற்றிய பகவன் நாமகீர்த்தனங்கள் கிரம்ப பக்தி ரசம் பொருந்தியிருந்தன. மேலும் அவள் தொனியோ காதுக்கு வெகு இனிமையாகவு மிருந்தது. அவள் இராகத்துடன் பாடினல் அவளுக்கு ஈடு எவருமிரார்கள். அவள் பாட்டைக் கேட்கும் ஜனங்கள் ஆனந்தப் பரவசமடைந்து கடவுளையே நினைத்துக்கொண்டு அவ்விடத்திலேயே யாதொரு உலக சிந்தனையின்றி வீற்றிருப்பார்களாம். அவளுடைய இனிய குரலும், திவ்யமான கீர்த்தனங்களை இயற்றி அழகான இராகத்துடன் பாடுதலும், அவளுக்கு கடவுளிடத்தில் அபார அன்பும் பக்தியும் உண்டானது. ஈஸ்வர அருளே. அவளுக்கு மோக்ஷசாதனத்தை யடையவேண்டுமென்ற எண்ணம் அவள் மனதில் ஸ்திரமாக ஏற்பட்டிருந்ததேயொழிய இவ்வுலகவிஷயத்தில் யாதொரு இல்லற ஆசை பிறக்கவேயில்லை. அவளுடைய ஹிருதயம் கமலத்தைபபோல் விரிகது யாதொரு கல்மஷமின்றியிருந்தது. அவளுடைய தோழிகளும் இவ்வுலகம் இருககிறதென பதையே மறந்திருந்தார்கள்.

"உள்ளங்குழைய வுடல்குழைய வுள்ளிருந்த
கள்ளங்குழைய வென்று காண்பேன் பராபரமே"

என்று யாவரும் வருந்தி பின்வருமாறு பகவானை ஸ்துதி செய்தார்கள்.

"ஓயாதோ வென்கவலை யுளளே யானந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே"

"கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே"

"உள்ளமறிவா யுழப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே"

"எண்ணாத வெண்ணமெலா மெண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே"

"ஐயோ வுனைக்காண்பா னாசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாப் புகலாய்பராபரமே"

"துன்பக்கண்ணீரிற் றுளைந்தேற் குன்னானந்த
வின்பக்கண்ணீர் வருவதெந்நாள் பராபரமே"

"நன்றறியேன் றீதறியே னென்று நின்றவனை
கான்றறியே னேழை யென்னே பராபரமே"

"முனியே நான்முகனே முக்கணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா
"தனியே னாருயிரே யென்தலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டே னென்றும் மாயம் செய்யேலென்னை"
"வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்டமுழு துந்தருவோய் நீ
வேண்டுமயன் மண்கரியோய் நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்"

"வேண்டிநீ யாதருள்செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே"

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவை"

இவ்விதம் தமது அரண்மனையில் பஜனை செய்துவந்தாள் மீராபாயும் அவரது தோழிகளும், தமது அரண்மனையிலேயே யிருந்துஎவ்வளவு காலம் இவ்விதம் செய்துவர மனமிசையும்? ஒருவர்மனதில் ஈஸ்வர ஞானம் முதிர்ந்து விட்டால் தமது இருப்பிடத்திலேயே தங்கி யிருக்க மனம்வராது. கோயிலுக்குச் சென்று அங்குசகல கீர்த்தனைகளையும் பாடமனம்வருமல்லவா? அப்படியே நமது ராணியாரும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆலயத்திற்குச் சென்று அவரை மனப் பூர்ணமாயும் திரிகரண சுத்தியோடும் வணங்கி பூசைசெய்ய மனங்கொண்டாள். தமது கிரகத்திலிருக்க ஆசைகொள்ளவேயில்லை. உடனே தமது கணவர் உத்திரவு பெற்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆலயத்திற்குச் சென்று அங்கு அவரைப் பலவிதமாய் துதிசெய்தும் நடனம் செய்தும் வந்தாள். ஆனந்தப் பரவசத்தால் மூர்ச்சையற்று கீழேவிழுந்து விடுவாள்; உடனே அவருடைய தோழிகள் அவளை மெள்ள எடுத்து மடியில் வைத்துக்கொண்டு ப்ரக்ஞை வரும்படியாக விசிறுவார்கள். மூர்ச்சை தெளிந்த வுடன் மறுபடியும் சில நாம கீர்த்தனங்களைச் சொல்லிவிட்டுதமது தோழிகளுடன் அரண் மனைக்குப் போவாள்.

மீராபாய் இவ்விதம் தினம் ஆலயத்திற்குப்போய் அங்கு பகவன் நாம கீர்த்தனங்களை தமது இனியகுரலில் பாடிக்கொண்டு வந்தாள். இவள்பாடுவதைக் கேட்கும் ஒவ்வொருவருடைய மனமுருகி கடவுளை ஸ்துதிசெய்யவும் மீராபாயை நேசிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். மோக்ஷசாதனத்தைப் பெற்று சந்தோஷமாயிருக்க இதுதான் முக்கியவழியென்று யெண்ணி மீராபாயுடன் பஜனைசெய்ய கூட்டம் கூட்டமாய் கணக்கில்லாமல் ஜனங்கள் பல திக்குகளிலிருந்தும் வரத்தலைப்பட்டார்கள். இவர்கள் மீராபாயின் இனிய குரலைக் கேட்டும் அவளுடன் பாடியும், தாண்டவமாடியும், வந்தார்கள். அரண்மனையில் மீராபாய் அதிக காலமிருப்பதேயில்லை ; கோயிலில் தான் தங்கி கடவுளே தனது ஹிருதய கமலமென்று எண்ணி அவரைப்பலவாறு சதா துதிசெய்து கொண்டுவந்தாள். அநேகர் மீராபாயுடன் இங்கு தங்கியிருக்கும் காலம் வரையில் இருந்தார்கள். அநேக ஆயிரம் ஜனங்கள் பஜனை முடிந்தவுடன் இம்மகா உத்தமராணியின் பெயரை இந்தியாவில் மற்றபாகங்களிலுள்ள ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுவார்கள். அவளைப்போல் யாவரும் நடந்தால் நலமென்று போதிப்பார்கள. இதைக்கேட்ட திரளான ஜனங்கள் அடிக்கடி கோயிலுக்கு வருவார்கள். அவர்களும்பஜனையில்சேர்ந்து ஆனந்தங் கொண்டு கடவுளைத் துதிசெய்வார்கள்.

மீராபாயுக்கோ மனது உறுதியானது. கடவுளை ஸ்துதிசெய்தால் போதுமானது, வேறு ஒன்றும் தேவையில்லை. இவ்வித எண்ணத்தைக் கடைபிடித்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானை அல்லும் பகலும் எவர்மனதும் கரையும்படி பின்வருமாறு ஸ்துதிசெய்து வருவாள்.

"திருத்தாய் செம்போத்தே
திருமா மடன் கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவனைவரத்
திருத்தாய் செம்போத்தே"

இவ்விதப் பக்திரசமாய்த் தன்னை மறந்து பாடிவந்தாள்.

மறுபடியும், மிக்க பத்தியோடு பின்வருமாறு பாடி ஈசனைத்துதிசெய்தாள்.

"கரையாய் காக்கைப் பிள்ளாய்
கருமாமுகில் போனிறத்தன்
உரையார் தொல்புக ழுத்தமனைவரக்
கரையாய் காக்கைப் பிள்ளாய்"

"கூவாய் பூங்குயிலே
குளிர்மாரி தடுத்துகந்த
பாவாய்மீண்ட மணிவண்ணனை வாக்
கூவாய் பூங்குயிலே"

"கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார் பூங்குழல் மாதவனைவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி"

"சொல்லாய் பைங்கிளியே
சுடராழி வலனுயர்த்த
மல்லார்தோள்வட வேங்கடவனைவரச்
சொல்லாய் பைங்கிளியே"

"கோழிகூ வென்னுமால்
தோழிநா னென்செய்கேன்
ஆழிவண்ணர் வருப்பொழுதாயிற்று
கோழிகூ வென்னுமால்"

"தேவர்க்கும் பவித்திரமாந் தெய்வமா மணியதனை
யாவர்க்கும் புனைதருதற் கெளிதன்றே யுதுபுனைந்தார்
மூவர்க்கு முதலான முதன்மையோ ரதுவறிந்து
பூவர்க்க மிவனடிக்கே சொரிந்திவனைப் பூசிப்பாய்"

"செல்வமென்ன கீர்த்தியென்ன சித்தியென்ன கற்றிடுங்
கல்வியென்ன வீங்கி வற்றி ஞற்பயன்கள் காண்பரோ"
"நல்லதென் கலைசைமேய நாதனன்பர் நாமமே
சொல்லியேத்தி யேவல் தொழும்பர் காணவல்லரே"
"அண்டங்க ளனைத்துமாக்கு மலர்மிசை யயனே போற்றி
யண்டங்க ளனைத்துங் காக்கு மரியென் மதிப போற்றி"
"யண்டங்க ளனைத்து மாற்று மதிபெல வானே போற்றி
யண்டத்தின் பேதத்தப்பா லநாதியேயல போற்றி"

ஸி. எஸ். ரா.

NEWS & NOTES.

சமாச்சாரக் குறிப்பு.

நமது கவர்னரவர்கள் சுற்றுப்பிரயாணம்செய்துவிட்டு இம்மாதம் 19௳ சென்னைக்குத் திரும்பிவந்தார்.

மிஸ்மைடிங்கேல் என்ற பரோபகாரி ஆகஸ்டுமாதம் 13௳ இங்கிலாந்தில் இறந்துபோனதைக்கேட்க யாவரும் மிக்க விசனப்படுவார்கள். இம்மாது நேஷனல் இந்தியன் சபைக்கு உப-அக்ராசனாதிபதியாகவு மிருந்தார்கள். இம்மாதின் சரித்திரம் நமது நேயர்களுக்கு தெரியுமாறு கூடிய சீக்கிரத்தில் பிரசுரிக்கப்படும்.

காசி மகாராஜாவுக்கு காசியை நமது காருண்ய கவர்ன்மெண்டார் மறுபடியும் அளித்து சிற்றரசர்களி லொருவராகயிருந்து அதை அரசாண்டு வரும்படி உத்திரவளித்ததைக்கேட்க யாவருஞ் சந்தோஷப்படுவார்கள். இவர் இது வரையிலும் கவர்ன்மெண்டிலிருந்து மாதம் ரூபா 20,000 பெற்றுவந்தார்.

ராய்பஹதூர் C. கோபாலன் நாயரின் மனைவியார் இறந்துவிட்டதைப்பற்றி மிக விசனப்படுகிறோம். இம்மாது கள்ளிக்கோட்டை ஸ்திரீ சங்கத்துக்கு தம்மாலியன்றதை உதவியைப் புரிந்துவந்தார்கள்.

நமது புதிய வைஸிராய் H. E. லார்ட் ஹார்டிஞ்ச் தமது மனைவியாருடன் இம்மாதம் 18௳ காலை பம்பாயில் வந்துசேர்ந்தார். அவ்வூரார் இவரை வரவேற்று ஒரு உபசாரபத்திரமு மளித்தார்கள். லேடி ஹார்டிஞ்சு இந்திய மாதர்களுக்கு வேண்டிய நன்மையைச்செய்வார்களென்று சொன்னது மிகமுக்கியமானது. இவருக்கு இந்தியரிடத்தில் மிக்க அநுதாபமுண்டு. எச். ஈ. லேடி ஹார்டிஞ்சு டப்ரின் பண்டுக்கு சபைத்தலைமையை வகித்து இந்திய மாதர்களின் விருத்தியை நாடிவர ஈசன் தேகபலத்தை யளிப்பாராக.

விசாகப்பட்டணத்திலுள்ள பாரதஸ்திரீ சமாஜத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமதி புலுசு சூரம்மகாருவும், குண்டூர் ஸ்திரீ சனாதன தர்மமண்டலியின் காரியதரிசியாகிய ஸ்ரீமதி வெங்கமாம்பாகாருவும் பெஜவாடவிற்கு வந்து அங்குள்ள ஸ்திரீகளுக்கு உபந்நியாசம் செய்ய ஏற்பாடுசெய்து சூரம்மகாரு பெண்கல்வி, ஸ்திரீகளின் சங்கங்களின் அநுகூலங்கள், கற்பு, ஒற்றுமை முதலிய அரிய விஷயங்களைப்பற்றி அங்குள்ள மாதர்களுக்கு பயன் படுமாறு அக்டோபர் 26௳ முதல் 30௳ வரையில் உபந்நியாசம் செய்தார்கள். தினம் சாயங்காலம் உபந்நியாசத்தைக் கேட்க திரளாக மாதர்கள் வந்தார்களாம். கடைசியாக 40-ஸ்திரீகள் சேர்ந்து சங்கம் ஒன்றை அங்கு ஸ்தாபித்தார்கள். மேற்கூறிய இரு காரியதரிசிகளும் இப்புதிய சங்கத்துக்கு தம்மாலியன்ற உதவி புரிவதாகவும் அடிக்கடி இங்கு வருவதாகவும் வாக்களித்தார்களாம்.

Dr. Bankin Chandra Chatterji's Wonderful

WOMEN FRIEND PILLS.

Awarded GOLD MEDALS and Testimonials for its superirity over other preparations.

இந்த ஆச்சரியமான மருந்து சென்ற 30-வருஷகாலமாக உதிரசிக்கல், பிரசவகாலத்தில் அதிக நோவு, முலைப்பாலில்லாமலிருத்தல், அதனால் உண்டாகும் சுரம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்தென யாவராலும் கையாளப்பட்டு வருகிறது. ஸ்திரீகளுக்கு இது பலத்தைக் கொடுத்து நரம்பு முழுவதிற்கும் வலுவைக் கொடுக்கிறது. இளைத்துப்போனவர்கள் சீக்கிரத்தில் பலமுள்ளவர்களாகி விடுகிறார்கள். மாத்திரைகளின் விலை ரூபா-2.

வேண்டுவோர் டாக்டர் பங்கிம் சந்தர் சட்டர்ஜி, 50. ரஸ்ஸாரோட்டு, வடபவானிபூர் கல்கத்தா, என்று இங்கிலீஷில் எழுதவும்.